மலர்-3 இதழ்-59 பிப்ரவரி 1-15 2019 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

மெயில் புக்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளியிடப்படும் இதழ்

ஆன்மிகமலர் mobile app
GET IT ON Google Play




## ஸ்ராத்த காலத்தில் படைக்கவேண்டிய

# 1008 காய்கறிகள்

# பாவம் போக்கும் பதீதபாவன சக்ர தரிசனம்

மனித பிறவிக்கு மோட்சத்தைத் தரும் தலங்களாகத் திகழ்வது "அயோத்தியா, மதுரா, மாயா, காசி, காஞ்சி, அவந்திகா, துவாரகை" இந்த ஏழு தலங்களும் மோட்சத் தலம் என்று கருட புராணம் 16.14ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் மாயா என்பது ஹரித்வாரையும், அவந்திகா என்பது உஜ்ஜைனையும் குறிக்கும்.



இந்த ஏழு மோட்ச தலங்களையும் தரிசிப்பதால் ஒருவர் பிறவிச்சுழற்சிகளில் இருந்து விடுபட்டு மோட்சத்தைப் பெறுவர் என்பது ஐதீகம்.

- அயோத்தியா உத்திர பிரதேசத்தில் அமைந்துள்ளது.
- மதுராவும் உத்திர பிரதேசத்தில் அமைந்துள்ளது
- ஹரித்வார் உத்தரகாண்டில் அமைந்துள்ளது.
- காசி (வாரணாசி) உத்திர பிரதேசத்தில் அமைந்துள்ளது.
- காஞ்சி தமிழ்நாட்டில் அமைந்துள்ளது.
- உஜ்ஜைன் மத்திய பிரதேசத்தில் அமைந்துள்ளது.
- துவாரகை குஜராத்தில் அமைந்துள்ளது.

இவ்வாறு மோட்சத்தை தரும் தலத்துடன் உடனடியாக பாவம் போக்கும் ஒரு தலமும் உள்ளது. அதுதான் பூரி ஜகந்நாதர் கோயில், இந்த கோவிலில் இன்னுமொரு சிறப்பு உள்ளது.

நாம் அறிந்தும் அறியாமலும் செய்யும் ஒருசில பாவங்களை உடனடியாக போக்க வேண்டுமானால், பூரி ஜகநாதர் கோயில் கோபுரத்தில் உள்ள பதீதபாவன சக்ரத்தை (படத்தில் உள்ளது) தரிசனம் செய்வது.



இந்த சக்ரம் பூரி ஜகந்நாதர் கோயில் விமானத்தில் உள்ளது. பூரி ஜகந்நாத கோவிலில் உள்ள ஸ்வேத கங்கை எனும் திருக்குளத்தில் குளித்துவிட்டு, அங்கிருந்தே ஜகந்நாதர் கோயில் கோபுரத்தில் உள்ள இந்த பதீதபாவன சக்ரத்தை தரிசனம் செய்தால், அந்த க்ஷணம் வரை செய்த ஒருசில பாபங்கள் அகலும்.

www.aanmeegamalar.com





# கஷ்டங்கள் மருந்தைப் போன்றது



மருந்து கசக்கிறது என்று குழந்தை கதறியழுதால் தாய் விட்டு விட மாட்டாள். குழந்தை குணமாக வேண்டும் என்று அக்கறை அவளுக்கு அதிகமுண்டு. பலவந்தமாக மருந்தை குழந்தை வாயில் திணிக்கையில் குழந்தை தாயை ஒரு கொடுமைக்காரியாகக் கூட நினைக்கலாம்.

குழந்தை என்ன நினைக்கிறது என்பது தாயிற்கு முக்கியமல்ல. குழந்தை குணமாக வேண்டும் என்பதே தாயிற்கு முக்கியம். குழந்தைக்கு எது நல்லது என்பதை குழந்தையை விடத் தாய் நன்றாக அறிவாள்.

கடவுளும் அந்தத் தாயைப் போல் தான்.

இனி கஷ்ட காலங்கள் வரும் போது கடவுளை திட்டாதீர்கள்.

அவற்றைத் தாங்கும் சக்தியையும் அவற்றிலிருந்து கற்கும் புத்தியையும் மட்டுமே கடவுளிடம் வேண்டுங்கள்.

# உன் இஷ்டப்படி நீ துறக்கவோ வேலை செய்யவோ முடியாது

ரமண மகரிஷிகளின் உபதேசித்தபடி ஆன்ம சாதனையில் ஈடுபடும்போது பக்தர்கள் ஆழ்ந்த பேரமைதியை உணர்கிறார்கள். அப்படி அனுபவித்து உணர்ந்த பேரமைதியை மீண்டும் குடும்பம் மற்றும் உலகாதாய விஷயங்களில் ஈடுபட்டு அதை (பேரமைதியை) இழக்க விரும்பாத ஒரு பக்தர் இவ்வாறு பகவானிடம் வினவினார்: உலக விஷயங்களில் இருக்கும்போதே சமாதி (பேரமைதி) சுகம் அனுபவிப்பது சாத்தியமா?



"நான் வேலை செய்கிறேன்" என்ற உணர்ச்சியே தடை. "வேலை செய்வது யார்?" என்று விசாரித்து, உன் உண்மை சொரூபத்தை நினைவில் கொள். வேலை செய்யவோ, துறக்கவோ முயல வேண்டாம். உன் முயற்சியே பந்தம். விதிக்கப்பட்டது நடந்தே தீரும். வேலையை விதிக்கப்படாதிருந்தால் நீ தேடினாலும் அது உனக்குக் கிட்டாது. வேலையே விதித்திருந்தால் நீ அதை விட்டு அகல முடியாது. உன்னைக் கட்டாயமாக வேலை வாங்கிவிடும்.

ஆகையால் அதையெல்லாம் பரமேசுவரனிடம் விட்டுவிடு. உன் இஷ்டப்படி நீ துறக்கவோ வேலை செய்யவோ முடியாது.

– மகரிஷி வாய்மொழி நூலிலிருந்து.

www.aanmeegamalar.com



# தினமும் திருச்சானூர் வந்து செல்லும் பெருமாள்

கிருஷ்ணாவதாரத்தை முடித்து பெருமாள் வைகுண்டத்தில் தங்கியிருந்தார். பூலோகத்தில் கலியுகம் தொடங்கி அநியா யங்கள் பெருகின. மீண்டும் இறைவன் பூமியில் அவதாரம் செய்ய வேண்டி, காஷ்யப முனிவர் தலைமையில் முனிவர்கள் யாகம் தொடங்கினர். யாகத்தை காண வந்த நாரதர், “யாகத்தின் பலனை” யாருக்குத் தரப் போகிறீர்கள்? என்று முனிவர்களைக் கேட்டார். பலனை சாந்தமான மூர்த்திக்கு தருவதென்று முடிவு செய்தனர். மும் மூர்த்திகளில் சாந்தமானவரை தேடி பிருகு வைகுண்டம் சென்றார்.

திருமால் பிருகுமுனிவரை கண்டு கொள்ளாமல் இருக்கவே, அவர் மார்பில் எட்டி உதைத்தார். திருமால் கோபம் கொள்ளாமல் உதைத்த பாதத்தை தடவி கொடுத்தார். பொறு மையும், அமைதியும் நிறைந்த திருமாலுக்கே யாகபலனைத் தருவதென முனிவர்கள் முடிவெடுத்தனர். மார்பில் உதைத்த பிருகு முனிவரைத் தண்டிக்கும்படி லட்சுமி சொல்ல திருமால் மறுத்துவிட்டார் லட்சுமி கோபம் கொண்டு வைகுண்டத்தில் இருந்து கிளம்பி, பூலோகத்தை அடைந்து தவத்தில் ஆழ்ந்தாள். திருமாலும் திருமகளை தேடி பூவுலகத்தைச் சுற்றி அலைந்து வேங்கடமலையில் வந்து ஒரு புற்றில் கண்மூடி அமர்ந்தார். அவருக்கு பசித்தது.இதுபற்றி, நாரதர் தவத்தில் இருந்த லட்சுமியிடம் சொன்னார். லட்சுமி வருத்த மடைந்தாள். நாரதர் அவளிடம் திருமாலின் பசியைப் போக்க உபாயம் சொன்னார்.

அதன்படி பிரம்மாவும், சிவனும் பசுவாகவும் கன்றாகவும் மாற, லட்சுமி தாயார் அவற்றின் எஜமானி போல் வேடமணிந்து, அப்போது அப்பகுதியை ஆட்சிசெய்த மன்னனிடம் விற்கச்சென்றாள். மன்னன் வாங்கிய பசு மேய்ச்சலுக்குச் செல்லும்போது திருமால் இருந்த புற்றுக்குச் சென்று பால் சொரிந்தது. பசுவினை மேய்த்த இடையன் பசுவின் பின்னால் சென்று புற்றில் பால் சொரிவதைக் கண்டான். கோடரியால் பசுவை அடிக்க முயன்றான். கோடரி தவறி புற்றுக்குள் இருந்த பெருமாளின் தலையில் பட்டு ரத்தம் சிந்தியது. தன் காயம் தீர மூலிகை தேடிச் சென்ற பெருமாள்ஆஸ்ரமம் ஒன்றினைக் கண்டார். அது வராஹ மூர்த்தியின்





ஆஸ்ரமம். அங்கிருந்த வகுளாதேவி (முற்பிறவியில் கண்ணனின் அன்னை யசோதையாக பிறந்தவள்) தன் பிள்ளையான திருமாலின் முகத்தைக் கண்டவுடன் பாசத்தில் மூழ்கினாள். திருமாலும் அன்புடன் வகுளாதேவியை “அம்மா என்று அழைத்தார். வகுளாதேவி தன் பிள்ளைக்கு “சீனிவாசன் (செல்வம் பொருந்தியவன்)என்று பெயரிட்டாள்.

தன் பிள்ளையின் காயம் தீர மருந்திட்டு, பசி போக்கிட கனிகளைத் தந்தாள். இந்நிலையில், சந்திரிகிரி என்ற பகுதியை ஆகாசராஜன் என்பவன் ஆண்டு வந்தான். பிள்ளை வரம் வேண்டி தன் குலகுரு சுகமாமுனிவரின் ஆலோசனைப்படி புத்திர காமேஷ்டி யாகம் செய்ய நல்ல நேரம் குறித்தான். யாகம் செய்யும் இடத்தை செம்மைப்படுத்தும் போது, பூமியில் புதைந்திருந்த பெட்டிக்குள் இருந்த தாமரையில், படுத்த நிலையில் ஒரு பெண் குழந்தை கிடைத்தது. தாமரைக்கு “பத்மம் என்று பெயர் உண்டு. எனவே குழந்தைக்கு “பத்மாவதி என்று பெயரிட்டான்.ராமாவதாரத்தின் போது வேதவதி என்னும் பக்தை, ராமனை மணாளனாக பெற வேண்டி தவம் செய்தாள். ராமனும் அவளிடம், பின்னாளில் அவளை மணம் செய்து கொள்வதாக வாக்குறுதி தந்தார். அதன்படியே வேதவதி பத்மாவதியாகப் பிறந்தாள். பிறந்து ஆகாச ராஜனின் மகளாக வளர்ந்து வந் தாள். சீனிவாசப் பெருமாளுக்கும்,

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள், மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ் புக் ஒர்க்,
அட்டைப்பட வடிவமைப்பு, நாளிதழ்கள்,
போன்றவை தரமாகவும் குறைந்த
செலவில் செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: 08825844033

பத்மாவதிக்கும் திருமணம் இனிதே நடந்தது. அதன்பின் சீனிவாசப்பெருமாள் கலியுகம் முடியும் வரை திருமலையில் விக்ரகரூபமாக பக்தர்களுக்கு அருள் தரும் விதமாக திருமலையில் எழுந்தருளினார். சோழமன்னன் தொண்டைமான், தேவலோக சிற்பியான விஸ்வகர்மாவின் உதவியுடன் பெருமாளுக்கு கோயில் ஒன்றை எழுப்பினார். பத்மாவதி அலமேலுமங்காபுரத்தில் அருளாட்சி செய்கிறாள். சீனிவாசப் பெருமாள் தினமும் திருச்சானூர் வந்துதங்கிவிட்டு காலையில் திருமலைக்கு திரும்பி விடுவதாக ஐதீகம் நிலவுகிறது.



# சகல தோஷம் போக்கும் யந்திர வடிவ சனி பகவான்



ஒருவருக்கு கண்டகச் சனி, ஏழரைச்சனி, அஷ்டமச்சனி இவை மூன்றும் கோச்சாரத்தில் இருக்கும்போது நவக்கிரக ஹோமம், சனி பகவானுக்கு சாந்தியும் செய்வது அவசியம். அஷ்டமத்தில் சனி இருக்கும்போது சிவபெருமானே பிச்சை எடுக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

சீதைக்கு ஜென்மத்தில் சனி இருந்த போதுதான் ராவணன் இலங்கைக்கு அவரைக் கவர்ந்துகொண்டு போனான். அரிச்சந்திரனும், நளனும் அஷ்டமத்தில் சனி இருந்து ஆட்டிப் படைத்தபோதுதான் நாடு, மனைவி, மக்கள் என சகலத்தையும் இழந்து நிர்க்கதியாக நின்றார்கள் என்றெல்லாம் வரலாறுகள் கூறுகின்றன.

ஆனாலும் இவ்வளவு துன்பங்களைத் தருபவராக இருந்தாலும், சனிபகவான் இளகிய மனம் படைத்தவர். சனி பகவான் ஒவ்வொரு ராசியும் உயிர்வாழ்வதற்குக் காரணமான ஜீவ நாடியாகும். எனவே சனிபகவானே ஆயுள்காரகன் என அழைக்கப்படுகிறார்.

இப்படிப்பட்ட சனிபகவான் திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி அருகே உள்ள ஏரிக்குப்பம் கோயிலில் யந்திர வடிவில் அமைந்து பக்தர்களின் குறைகளை தீர்த்து வருகிறார். அவருடன், அவரது அன்னை சாயாதேவியும் யந்திர வடிவில் அருள்பாலிக்கிறார்.

சனீஸ்வர பகவானின் பார்வை, அவருடைய மனைவியின் சாபத்தினால் வக்கிரமாக அமைந்தது. இதனால் சனீஸ்வரரின் தாய் சாயாதேவி சனீஸ்வரரைத் தன் அருகிலேயே வைத்திருக்கிறார். தாய் அருகிலேயே இருப்பதால் சனீஸ்வரர் எப்போதும் சாந்தமாகவே இருப்பார்.

## யந்திர அமைப்பு:

இங்கு சனீஸ்வர பகவான் யந்திர வடிவில் 5 அடி உயரம், இரண்டரை அடி அகலம் கொண்ட அறுகோண வடிவத்தில் அமைந்துள்ளார்.

அதன் ஆறு முனைகளில் திரிசூலமும், அடிப்பாகத்தில் மகாலட்சுமி, அனுமார் வடிவங்களும் இடம்பெற்றுள்ளன. யந்திர சிலையின் மேல்பக்கம் தென்புறமாக சூரியனும், நடுவில் ஸ்ரீசனீஸ்வரபகவானின் வாகனமான காகத்தின் உருவமும், வலப்புறமாக சந்திரனும் உள்ளனர்.

அவற்றின் கீழே ஷட்கோண யந்திரமும் நீர், நெருப்பு சம்பந்தப்பட்ட யந்திரமும் பொறிக்கப்பட்டுள்ளது. மேலும் சிவன், ஆஞ்சநேயர், சனீஸ்வரன் ஆகியோருக்கான பீஜாட்சர மந்திரங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. ஒரு கண்ணாடியை இந்த யந்திரத்தின் முன் வைத்து பார்த்தால், எழுத்துக்கள் நேராகத் தெரியும் படி அமைந்துள்ளது. இதுபோன்றதொரு அமைப்புடைய சிலை வடிவத்தை, அதிலும் சனீஸ்வர அம்ச சிலாரூபத்தை ஏரிக்குப்பம் தவிர வேறு எங்கும் காண்பதரிது.

## வரலாறு:

1535ம் ஆண்டு ஏரிக்குப்பம் பகுதியை ஆட்சி செய்து வந்த நாயக்க மன்னரின் படைத்தளபதியாக விளங்கியவர் வையாபுரி. இவர் இவ்வழியாக குதிரையில் சென்று கொண்டிருந்தார். காரணம் ஏதுமின்றி, திடீரென ஓடும் குதிரையிலிருந்து கீழே விழுந்த வையாபுரிக்கு இடது காலில் முறிவு ஏற்பட்டது. குதிரையும் நிலைதடுமாறி விழுந்ததால், அதற்கும் பலத்த அடி.

அச்சமயம் ஒரு பெண்ணின் வாயிலாக இறைவன் வெளிப்பட்டு, சனீஸ்வர பகவானுக்கு கோயில் ஒன்றை இங்கே எழுப்புமாறும், சிறப்பு வழிபாடுகள் செய்யச் சொல்லி, மேலும் அதனால், வையாபுரியின் உடல்நலம் தேறும் என்றது. அதன்படியே உடல் தேறிய வையாபுரி, பெரியோர்களின் ஆலோசனைப்படி யந்திர வடிவிலான சனீஸ்வரன் சிலையை அமைத்து 4கால பூஜைகளை செய்து வந்தார். கால வெள்ளத்தில் கோயில் சிதைவுற்றது. யந்திர சிலை முட்புதர்களால் மூடப்பட்டது. சமீபத்தில் தொல்பொருள் துறையினரால் அகழ்வாராய்ச்சி செய்யும் போது மீண்டும் கண்டெடுக்கப்பட்டு பூஜைகள் நடைபெற்று வருகிறது.

## பரிகாரம்:

கோயிலுக்கு பின்புறத்தில் அமைந்துள்ள ‘பாஸ்கர தீர்த்தம்‘ என்ற குளத்தில் நீராடி சனீஸ்வர பகவானை வழிபட்டால் திருமண வரம், குழந்தைப்பேறு, நோய் நிவர்த்தி, லட்சுமி கடாட்சம், சனீஸ்வர தோஷம் மற்றும் சகல தோஷம் போன்றவை நிறைவேறுவதாகவும், எள் முடிச்சிட்ட தீபம், நல்லெண்ணெய் தீபம் ஆகியவற்றை ஏற்றினால் வேண்டும் வரம் கிடைப்பதாகவும் பக்தர்களின் நம்பிக்கையாக உள்ளது. தடைப்பட்ட சுபநிகழ்ச்சிகள் நடைபெறவும், நோய், தோஷம் அகலவும், 9 சனிக்கிழமை இங்கு வந்து எள்முடிச்சு தீபம் ஏற்றினால், நன்மை கிடைக்கும்.

சனிக்கிழமைதோறும் சிறப்பு பூஜை, ஒவ்வொரு வருடம் காணும் பொங்கல் அன்று பால்குட அபிஷேகம் சனிப்பெயர்ச்சியன்று சிறப்பு யாகமும் சிறப்பு அபிஷேகமும் நடைபெறும்.

வேலூர்திருவண்ணாமலை சாலையில் சந்தவாசலில் இறங்கி அங்கிருந்து 6 கி.மீ. தொலைவில் கோயில் உள்ளது. அங்கிருந்து ஷேர் ஆட்டோ மற்றும் ஆரணி, போளூரில் இருந்து பஸ் வசதி உள்ளது.





# விஷ்ணு சஹஸ்ர நாமத்தின் மகிமை

## கருடனுக்கு உணர்த்திய சிவபெருமான்



திரேதாயுகத்தில் மகாவிஷ்ணு ராமாவதாரம் எடுத்தபோது, போர்முனையில் ராவணனின் மகன் இந்திரஜித், இராமபிரானை எதிர்கொண்டான். அவனது எந்த மந்திர மாய்மாலங்களும் ஸ்ரீராமனிடம் பலிக்காமல் போகவே இறுதியில் நாகாஸ்திரத்தை ஏவினான். பரம்பொருளேயானாலும் ஸ்ரீமன் நாராயணன் மானிட அவதாரம் அல்லவா எடுத்திருக்கிறார். எனவே நாகாஸ்திரத்தால் கட்டுண்டு மூர்ச்சையாகி வீழ்ந்துவிட்டார். கூடவே லக்ஷ்மணனும்.

இதை நாரத மகரிஷி பார்த்து பதறிப்போய், வைகுண்டம் போய் கருடனிடம், "இராமபிரானை இந்திரஜித்தின் நாகபாஸத்திலிருந்து விடுவிக்க உன்னால் மட்டுமே முடியும். நீ உடனே சென்று இராமபிரானை காப்பாற்று" என்கிறார்.

கருட பகவான் வந்து தன் சிறகுகளால் வீசி அவர்களை மூர்ச்சையிலிருந்து தெளிய வைத்தார். பரமனையே காப்பாற்றியதால் கருடனுக்கு கர்வம் ஏற்பட்டது.

"என்ன நாரதரே இராமர் பரம்பொருள் அவரே எல்லாம் என்று கூறுகிறார்கள். ஆனால் நான் இல்லாவிட்டால் இராமரை யார் காப்பாற்றியிருப்பார்கள்?" என்றார்.

கருடனுக்கு ஏற்பட்டுள்ள கர்வத்தை புரிந்துகொண்ட நாரதர், இந்த சந்தேகத்தை சத்தியலோகம் சென்று பிரம்ம தேவரை கேட்கும்படி ஆலோசனை கூறினார். உடனே சத்தியலோகம் சென்ற கருடன் அங்கு பிரம்மதேவரிடம் கேட்க, பிரம்மதேவரோ "நான் சதாசர்வ காலமும் தவத்தில் இருப்பவன். எனக்கு எப்படி அது பற்றி தெரியும். ஒருவேளை சிவபெருமானிடம் கேட்டுப்பார். எனக்கு தெரிந்து அவர் ஒரு சிறந்த ராம பக்தர். உன் கேள்விக்கு பதில் கிடைக்கலாம்!" என்றார்.

உடனே கருடன் கயிலாயம் சென்றான். அங்கு சிவபெருமானை பார்க்க, தேவாதி தேவர்களும் ரிஷிகளும் காத்திருக்க, சிவபெருமான் தரிசனத்திற்கு வர தாமதமானது.

கைலாயத்தில் ஒரு நொடி என்பதன் கணக்கே வேறு. சில நொடிகள் கருடன் காத்திருக்க அதற்குள் பல யுகங்கள் முடிந்திருந்தன.

கருடன் இறுதியில் நந்தியிடம் கெஞ்சினார். "நந்தி பகவானே, ஒரு பெரும் சந்தேகத்தை பரமேஸ்வரனிடம் கேட்க வந்திருக்கிறேன். கொஞ்சம் சீக்கிரம் தரிசனம் தரச் சொல்லுங்களேன். நான் மட்டுமல்ல இங்கே முப்பத்து முக்கோடி தேவர்களும் அவர் தரிசனதிற்காக காத்திருக்கிறார்கள்" என்று கூற, "சுவாமி பூஜையில் இருக்கிறார். அது முடிந்ததும் வருவார்!" என்று நந்தி கூற கருடன் திடுக்கிட்டார்.

என்னது சிவபெருமான் பூஜையில் இருக்கிறாரா? முப்பத்துமுக்கோடி தேவர்களும் இங்கே அவருக்காக காத்திருக்க அவர் யாரை பூஜித்துக் கொண்டிருக்கிறார்? என்ற சந்தேகம் ஏற்பட்டது கருடனுக்கு.

அடுத்த கணம் அங்கே பிரத்யட்சமான சிவபெருமான், "கருடா நான் ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தியை பூஜித்துக் கொண்டிருந்தபோது அவசரமாக அழைத்தது ஏனோ?"

கருடனுக்கு ஏற்பட்ட அதிர்ச்சிக்கு அளவேயில்லை. "சுவாமி இங்கே முப்பத்து முக்கோடி தேவர்களும் யுகயுகமாக தங்கள் தரிசனத்திற்கு காத்திருக்க, தாங்களோ ராமனை பூஜித்ததாக சொல்கிறீர்கள். நானோ அவரது மகத்துவம் உணராதபாவியாகிவிட்டேன். என் கர்வம் இத்தோடு ஒழிந்தது. இராமபிரானை நாகபாசத்திலிருந்து விடுவித்ததால் தலைக்கனத்தோடு திரிந்தேன். ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி மீது எனக்கு மாறாத பக்தி ஏற்பட என்ன செய்யவேண்டும்? அதற்கு அருள் செய்யுங்கள்" என்று கேட்டுக்கொள்ள, பரமேஸ்வரன், மெலிதாக புன்னகத்தார்.

ஒரு பறவைக்கு மற்றொரு பறவையின் மூலமே ஞானத்தை புகட்டவேண்டுமே என்று திருவுள்ளம் கொண்ட கங்காதரன், "கருடா, அதை என்னால் விளக்க இயலாது. அதற்கு சாதுக்களின் சத்சங்கம் வேண்டும். நீ நேராக கயிலையின் வடக்கே உள்ள நீலாச்சலத்திற்கு செல். அங்கு காகபுசுண்டி ஹரியின் பெருமைகளை இதர ஜீவராசிகளுக்கு கூறிக்கொண்டிருப்பார். அவர் உனக்கு ராமபிரானின் மகத்துவத்தை விளக்குவார்" என்று கூறி மறைந்தார்.

கருடனும் நீலாச்சலத்திற்கு சென்று காகபுசுண்டியை வணங்கி, இராமபிரானின் பெருமைகளை கூறுமாறு கேட்டுக்கொள்ள, அவரும் இராமபிரானின் பெருமைகளை விளக்கி, அனைத்தும் இராமபிரான் உருவாக்கிய மாயையே என்று விளக்கி கூறினார்.

"சுவாமி இராமபிரானை விட மகத்துவம் மிக்கவர் அண்ட சராசரத்தில் எதுவுமில்லை என்பதை புரிந்துகொண்டேன். நன்றி!"

"இல்லை கருடா இராமபிரானை விட மகத்துவம் மிக்கது ஒன்று இருக்கிறது."

"என்ன இராமபிரானைவிட மகத்துவம் மிக்கது இருக்கிறதா?" கருடன் ஆச்சரியத்திலும் குழுப்பத்திலும் மூழ்க, "இராமநாமமே அது. இராமனைவிட அவன் நாமத்திற்கு மகத்துவம் அதிகம்!" என்றார் காகபுசுண்டி.

கருடனும் தெளிவுபெற்று அது முதல் இராமபக்தியில் சிறந்து விளங்கினார்.

**ஸ்ரீ ராமராம ராமேதி ரமே ராமே**
**மனோரமே**
**சஹஸ்ர நாம தஸ்துல்யம் ராம நாம**
**வரானனே**

– விஷ்ணு சஹஸ்ர நாமம்

விஷ்ணு சஹஸ்ர நாமத்தில் பரமேஸ்வரன் பார்வதியிடம் கூறிய இந்த வரிகளின் அர்த்தம் தெரியுமா? ராம ராம ராம என்று ஒரு முறை கூறினாலே மகாவிஷ்ணுவின் சஹஸ்ர நாமத்தையும் சொன்ன பலன் கிடைக்கும் என்பது தான்.





# தேவ உணவை ஏற்போம் அசுர உணவை தவிர்ப்போம்

உப்பு மனிதன் குருதியில் கலந்தவுடன் மிருக குணம் வந்து விடும், இது இறை நிலைக்கு எதிர்மறையான பலனை உடையது. இதனால்தான் இறைவனுக்கு படைக்கும் எந்த உணவிலும் உப்பை சேர்க்க மாட்டார்கள்.

அதே சமயம் இறை பிரசாதத்தில் இனிப்பு இல்லாமல் செய்ய மாட்டார்கள். குறிப்பாக தேனை கலக்காமல் எந்த இனிப்பையும் செய்ய மாட்டார்கள். (தற்காலத்தில் சர்க்கரைக்கு முக்கியத்துவம் தருவது வேதனைதான்).

ஒரு உடல் இறந்த பின்பும் பதபடுத்த வேண்டும் என்றால் உப்பை கலந்து வைத்தால் அவை அப்படியே இருக்கும் .

உப்பு மனிதர்களுக்கு நிறைய நோய்களை கொடுக்கும். இதனால்தான், சித்த வைத்திய முறையில் உப்பை சேர்க்காமல் உணவு உண்ண பத்தியம் உண்டு, கைதேர்ந்த வைத்தியர்கள் இதை அறிவார்கள்.

தேன்....

தேன் தன்னுடன் சேரும் பொருளை கெடுக்காது தானும் கெடாது.

தேன் நாக்கில் மட்டும் இனிப்பை தரும் ஆனால் தொண்டை வழியே உள்ளே சென்றவுடன் இது கசப்பாக மாறிவிடும் தன்மை உடையது.

இதனால் தான் தேனை கொண்டு மருந்தை கலந்து தந்தார்கள்.

மேலும் தேன் உயிர் சக்திகளை தரும் பொருளை அப்படியே வைத்து இருக்கும் .

ஒரு நெல்லி கனியை தேனில் ஊறப்போட்டு அதை 50 வருட காலம் கழித்து எடுத்து சாப்பிட்டால் அதன் உயிர் சக்தி அப்படியே இருக்கும்.

இதனால் சித்த மருத்துவத்தில் தேனில் கலந்த லேகியம் தருவார்கள்...

மனிதன் நல்ல ஆரோக்கியத்துடன் வாழ:

1. மாதம் 2 முறையாவது 3 வேளையும் உப்பு இல்லாமல் உண்ண பழகி கொள்ள வேண்டும்.
2. அடிக்கடி தேன் சேர்த்து உண்ணவேண்டும். தேன் சர்க்கரை நோய்களை தூண்டாது.
3. தேனுடன் பால் கலந்து சாப்பிட சுண்ணாம்பு சக்தி நிறைய கிடைக்கும் நோய்கள் உப்பின் தேக்கத்தால் வருகிறது.

நோய்களை குணப்படுத்த உப்பை வைத்து தயாரித்த மருந்துகள் தருகிறது இன்றைய மருத்துவம் (alaopathy)

இனிப்பை வைத்து வைத்யம் செய்வது homeopathi. உப்பும், தேனும் தன்னுடன் எது சேர்த்தாலும் கெடுக்காது.

நம் சமயத்தில் தேவ அசுர சண்டை என்பது தேனுக்கும் உப்பிற்கும் நடக்கும் சண்டையே.

தேவ அமிர்தம் என்பது தேன், தேன் தேவகுணம் உடையது.

உப்பு அசுரகுணம் உடையது

தேன் தேவர்கள் போல் நம்மை இறைவனிடத்தில் அழைத்து செல்லும்.

உப்பு பூலோகத்தில் இருக்க வைக்கும்.

ஆகவே உப்பை குறைத்தும், தேனை சேர்த்தும் சாப்பிட்டு பழகி கொள்வோம்.

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033


ஆன்மிகமலர் மெயில் புக்

# அண்ணன் ரங்கநாதர் தரும் சீர்வரிசை... மகிழ்ச்சியில் கேட்டதை தரும் சமயபுரத்தாள்

திருக்கடையூரில் தன்னை அண்டிய மார்க்கண்டேயரை எமனிடமிருந்து காப்பாற்ற ஈசன் கால சம்ஹார மூர்த்தியாக அவதரித்து எமதர்மனை அழித்தார்.

இதனால் உலகில் ஜனன மரண நிலையில் பெரிதும் மாற்றம் ஏற்பட்டது.

இதனைக்கண்ட எமதர்மனின் சபையில் நோய்களின் அதிபதியாக இருந்த மாயாசூரன் என்பவன் பூவுலகில் இறப்பு நின்றுவிட்ட நிலையில், நோய்களைப் பரப்பி மக்களைத் துன்புறுத்தினான்.

இதனைக்கண்ட ஈசன் பார்வதி தேவி யை பார்க்க, பார் வதி தேவி தன் அம்சமாக மாரியம்மனை மாயாசூரனை வதம் செய்ய அனுப்பி வைத்தாள்.

மாரியம்மன் மாயாசூரனையும் அவனது சகோதரர்களையும் (சண்டன், முண்டன்) வதம் செய்து, அவர்கள் தலையை ஒட்டியாணமாக அணிந்து நோய்களின் கொடுமைகளிலிருந்து மக்களைக் காப்பாற்றி, ஈசனின் அருளுடன் தனது தமையன் ஸ்ரீரெங்கம் ரெங்கநாதர் திருக்கோயிலில் முதலில் அமர்ந்து, பின்னாளில் இப்போது உள்ள சமயபுரத்தில் வந்தமர்ந்து நமக்கு அருள்பாலிக்கிறாள்.

கருவறையில் சமயபுரம் மாரியம்மனின் வலது திருப்பாதம் மாயாசூரனின் தலைமீது பதிந்துள்ளதைக் காணலாம். சமயபுரம் மாரியம்மன் தனது எட்டுக் கரம்களில் இடப்புறமாக கபாலம், மணி, வில், பாசம், வலப்புறமாக கத்தி, சூலம், அம்பு மற்றும் உடுக்கை ஆகிய ஆயுதங்களைத் தாங்கியுள்ளாள்.

இடதுகாலை மடக்கி வைத்து வலது காலை தொங்கவிட்ட நிலையில் மாயாசூரனின் தலைமீது பதித்து, அமர்ந்து பக்தர்களின் குறைகளை நீக்கி, வளங்களை அளிக்கிறாள் தாய் மகமாயி, தாயை மஹாவிஷ்ணுவின் யோக மாயை என்பார்கள்.



இன்றும் சமயபுரம் மாரியம்மனுக்கு தைப்பூச நன்னாளில் ஸ்ரீ ரங்கம் ரங்கனாதரிடம் இருந்து சீர்வரிசைகள் வருகின்றன. அதுபோல மாசியில் அம்மன் பச்சை பட்டினி விரதம் இருக் கும் போது, சமயபுரத்தில் பூச்சொரிதல் விழா நடைபெறும்.

அப்போது நம் சமயபுரம் மாரியம்மனுக்கு முதல் பூவாக ஸ்ரீரெங்கம் ரெங்கநாதரிடம் இருந்து வரும் பூவே சூடப்படுகிறது.

அண்ணனிடமிருந்து வரும் முதல் பூவை சமயபுரத்தாள் ஏற்ற பின்பே மற்ற பூஜைகள் நடைபெறும்.

இதைப் போன்று ஸ்ரீரங்கம் ரங்கநாதர், தனது தங்கையான சமயபுரம் மாரியம்மனுக்கு சீர்வரிசை வழங்கும் நிகழ்ச்சிஆண்டு தோறும் தைப்பூசம் நாளில் நடைபெறும்.

ஸ்ரீரங்கம் கோயில் கருடமண்டபத்தில் இருந்து பட்டுப்புடவை, சந்தனம், மஞ்சள், மாலை, பழங்கள், தாம்பூலம் உள்ளிட்ட மங்கலப்பொருட்கள் அடங்கிய தட்டுகளுடன் ஊர்வலமாக புறப்பட்டு ரங்கா, ரங்கா கோபுரம் வழியாக நாதஸ்வரம் இசைக்க, மேளதாளம் முழங்க, வாண வேடிக்கையுடன் பக்தர்கள் புடை சூழ, ஸ்ரீரெங்கநாதர் வடக்கு வாசல் வழியாக கொள்ளிடம் ஆற்றுக்கு வருவார்.

சீர்வரிசையை ஸ்ரீரங்கம் கோயில் யானை சுமந்து கொண்டு வருவது வழக்கம்.

அப்போது அதற்கும் முன்பே சமயபுரத்தில் இருந்து வந்து முன்னதாக, கொள்ளிடம் ஆற்றில் தீர்த்தவாரி கண்டு, மறுகரையில் சமயபுரம் மாரியம்மன் பந்தலில் தன் அண்ணன் ஸ்ரீரங்கம் ரங்கநாதரிடம் சீர்வரிசை வாங்க காத்திருப்பார்.





அம்மன் தைப்பூசத்திற்காக கோவிலில் இருந்து கண்ணாடிபல்லக்கில் புறப்பட்டு வழி நடை உபயங்கள் பெற்று வட திருக்காவேரியை அடைகிறாள். அதற்கு பின், அண்ணன் ஶ்ரீரங்கம் ரங்கநாதர் கொள்ளிடக்கரையில் தங்கை மாரியம்மனுக்கு சீர் கொடுக்கும் விசேஷ நிகழ்ச்சி நடைபெறுகிறது.

அதைத் தொடர்ந்து அதிகாலை,1 மணிக்கு சமயபுரம் மாரியம்மனுக்கு கொள்ளிடக்கரையில் மகா அபிஷேகம், அலங்காரம் நடைபெற்று வட திருக்காவேரியில் இருந்து அம்மன் சமயபுரம் நோக்கி புறப்படுவது வழக்கமாக உள்ளது.

அதிகாலை அம்மன் வழிநடை உபயங்களுடன் நொச்சியம், மண்ணச்சநல்லூர் வழியாக வந்து மீண்டும் சமயபுரம் திருக்கோவிலை அடைகிறாள். அப்போது அம்மனை தரிசித்தால் வேண்டிய வரம் பெறலாம்.

ஆம்!அம்மன் தன் அண்ணன் ரெங்கநாதரிடம் சீர்வரிசை பெற்ற மகிழ்ச்சியில் இருப்பாள். அப்போது அன்னையிடம் நாம் வேண்டியதை வெகுவிரைவில் பெறலாம் என்பதால் இந்த சமயத்தில் பக்தர்கள் கூட்டம் நிரம்பி வழியும்.

## மன அமைதிக்கு ஏற்ற ஆசனம்



இந்த ஆசனத்தை தினமும் ஐந்து நிமிடங்கள் செய்து வந்தால், மனம் சாந்தப்படும், ஜீரணப் பிரச்சனைகள் தீரும், இடுப்பு எலும்புகள், முதுகு எலும்புகளை விரியச் செய்து இறுக்கத்தை தளரச் செய்யும், இடுப்பு வலி எளிதாக தீரும். பணிக்குச் செல்லும் பெண்களுக்கும், கம்ப்யூட்டர் அதிகம் பயன்படுத்துபவர்களுக்கும் மிகவும் பயனுள்ளது இந்த ஆசனம்.





# பித்ரு தோஷம் போக்கும்

# தை அமாவாசை

திதிகளில் சிறப்பானதாக அமாவாசை திதி போற்றப்படுகிறது. அமாவாசை சூரியனும், சந்திரனும் ஒன்றாக இணையும் நாள்.

மற்ற திதிகளில் ஏதாவது ஒரு கிரகம் திதி தோஷம் அடையும்.

அமாவாசையன்று எந்தக் கிரகமும் தோஷம் அடையாது. இதனால் அமாவாசையன்று சில செயல்களை தொடங்கினால் அது வெற்றி பெறும்.

ராகு, கேது மற்றும் பிற கிரகங்களால் ஏற்படும் பிரச்னைகளுக்குத் தீர்வு காண அமாவாசையன்று பரிகாரம் செய்தால், சிறப்பான பலனைத் தரும். மேலும் மூதாதையர்களின் ஆசியும் கிடைக்கும்.

## முன்னோர் வழிபாட்டுக்கு உகந்த திதி:

அமாவாசை திதி நம்முடைய முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுப்பதற்கான பிரத்யேகமான திதி.

மாதம்தோறும் அமாவாசையன்று திதி கொடுப்பதால், முன்னோர்களின் ஆசி நமக்குக் கிடைப்பதுடன், குடும்பத்தில் அமைதியும், மகிழ்ச்சியும் ஏற்படும். சகல சௌபாக்கியங்களும் உண்டாகும்.

அமாவாசை தோறும் திதி கொடுக்க இயலாதவர்கள் கூட வருடத்தில் மூன்று அமாவாசைகளில் அவசியம் திதி கொடுக்க வேண்டும் என்று சாஸ்திரங்கள் வலியுறுத்துகின்றன.

ஆடி, புரட்டாசி, தை ஆகிய மூன்று அமாவாசைகளில் கண்டிப்பாக நம்முடைய முன்னோர்களுக்கு திதி கொடுக்க வேண்டும்.

## மூன்று அமாவாசைகள்!

வருடத்துக்கு இரண்டு அயனங்கள். ஆடி மாதம் முதல் மார்கழி முடிய உள்ளது தட்சிணாயனம். இது சூரியனின் தென்திசை நோக்கிய பயணத்தைக் குறிக்கும்.





ஆன்மிகமலர் மெயில் புக்

தை முதல் ஆனி வரை உள்ளது உத்தராயனம். இது சூரியனின் வடதிசை நோக்கிய பயணத்தைக் குறிக்கும்.

இந்த அயனங்களில் உத்தராயனத்தில் பகல் பொழுதும், தட்சிணாயனத்தில் இரவுப் பொழுதும் அதிகமாக இருக்கும்.

இவற்றில், தட்சிணாயனம் தேவர்களுக்கு இரவுப் பொழுது. எனவே, இந்த காலத்தில் நம்மைப் பாதுகாக்கவும், நமக்கு அனைத்து நன்மைகளையும் தந்து ஆசீர்வதிக்கவும் நம்முடைய முன்னோர்கள் ஆடி மாதம் முதல் தேதியன்று பித்ருலோகத்தில் இருந்து பூமிக்கு வரத் தொடங்குகின்றனர்.*

கருடப் புராணத்தில் இந்த பித்ருலோகம் சூரிய மண்டலத்தில் இருந்து பல லட்சம் மைல்கள் தொலைவில் இருப்பதாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. பித்ருலோகத்தில் இருந்து புறப்படும் அவர்களை வரவேற்கும் விதமாக, **ஆடி மாத அமாவாசை** தினத்தில் அவர்களுக்கு நாம் தர்ப்பணம் கொடுத்து, அவர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்க வேண்டும்.*

புரட்டாசி மாதம் வரும் **மஹாளய அமாவாசை** நாளில் பித்ருக்கள் அனைவரும் பூமியில் ஒன்று சேருவதாக ஐதீகம். அன்று அவர்களுக்கு தர்ப்பணம் கொடுத்து அவர்களை மகிழ்ச்சி அடையச்செய்து, அவர்களுடைய ஆசிகளைப் பெற வேண்டும்.

**தை அமாவாசை** அன்று நம்முடைய முன்னோர்கள் பித்ருலோகத்துக்குத் திரும்பிச் செல்கின்றனர். அவர்களை மகிழ்ச்சியுடன் வழியனுப்பும் விதமாக தை அமாவாசையன்று நாம் தர்ப்பணம் கொடுக்க வேண்டும்.

பொதுவாக, ஒவ்வொரு மாதமும் வரும் அமாவாசையன்று தர்ப்பணம் கொடுப்பதுதான் மிகச் சிறந்தது. இயலாதவர்கள் கண்டிப்பாக இந்த மூன்று அமாவாசைகளிலாவது தர்ப்பணம் கொடுக்க வேண்டும். இல்லையென்றால், பித்ரு தோஷம் உண்டாகும்.*

## பித்ரு தோஷம் என்றால் என்ன?

முன்னோர்களின் வருத்தத்தாலும், சாபத்தாலும் ஏற்படுவது பித்ரு தோஷம்.



ஆன்மிகமலர் மெயில் புக்

GET IT ON Google Play
கூகுள் ப்ளே ஸ்டோரிலிருந்து
Aanmeega malar (mobile app)
டவுண்லோடுசெய்து, செல்போனிலேயே
நமது இதழ் முழுவதும் படிக்கலாம்.
ஆன்மிகமலர் .காம்

ஒருவர் பிறந்த ஜாதகத்தில் லக்னத்துக்கு 1, 5, 7, 9 ஆகிய இடங்களில் ராகு அல்லது கேது இருந்தால் அந்த ஜாதகம் பித்ருதோஷம் உடைய ஜாதகம் என்பதை அறியலாம்.

மேலும் ஜாதகத்தில் சூரியனோ அல்லது சந்திரனோ, ராகு அல்லது கேதுவுடன் சேர்ந் திருப்பதும் பித்ரு தோஷத்தைக் குறிக்கும்.

லக்னத்துக்கு 9ம் இடத்து அதிபதியும் 5ம் இடத்து அதிபதியும் சேர்ந்து லக்னம், 5ம் இடம், 9ம் இடம் ஆகிய இடங்கள் ஒன்றில் இருந்தாலும் பித்ரு தோஷம் ஏற்படும்.

ஒருவரின் ஜாதகத்தில் பித்ரு தோஷம் இருந் தால், அவருடைய குடும்பத்தில் அடுக்கடுக்கான சோதனைகள் ஏற்பட்டு துன்பம் விளைவிக்கும். இதற்கு உரிய பரிகாரம் செய்வது மிக அவசியம்.

**பித்ரு வழிபாட்டின் அவசியம்.**

பூமியில் பிறந்தவர்கள் யாருமே பாவ புண் ணியத்திலிருந்து தப்ப முடியாது. பாவங்களில் மகா பாவமாக சொல்லப்படுவது, நம்மைப் பெற்றவர்களையும் நம்முடைய முன்னோர்களையும் அன்புடனும் பொறுப்புடனும் கவனிக்காமல் இருப்பதுதான். அவர்கள் உயிருடன் இருக்கும்போது கவனிக்காமல் இருப்பது மகா பாவம் என்றால், அவர்கள் மறைந்த பிறகு அவர்களுக்கு முறைப்படி தர்ப்பணம் கொடுத்து, பித்ரு கர்மாவை நிறைவேற்றாமல் இருப்பது மகா மகா பாவம் ஆகும்.



**ராகு காலம், யமகண்டம் ஆகியவற்றை தர்ப்பணத்துக்கு பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. தர்ப்பணம் கொடுக்க மதிய வேளை மிகவும் சிறந்ததாகும்**

இத்தகைய பாவங்களுக்கு ஆளாகும் அன்பர்கள், பலவிதமான துன்பங் களுக்கு உள்ளாகின்றனர். அவர்கள் மட்டு மல்லாமல், அவர்களுடைய சந்ததியினரும் பல வகையான துன்பங்களை அடைகின்றனர்.

நம் முன்னோர்களுக்கு வருடாந்திர சிராத்தம் செய்வதுடன், ஒவ்வொரு அமாவாசையன்றும் தர்ப்பணம் கொடுக்க வேண்டும்.

இயலாத நிலையில் ஆடி, புரட்டாசி, தை ஆகிய மூன்று அமாவாசைகளிலும் புண்ணிய திருத்தலங்களுக்குச் சென்று அங்குள்ள நீர்நிலைகளில் கண்டிப்பாக தர்ப்பணம் கொடுக்க வேண்டும்.

அமாவாசை அன்று காலை ஆறு, கடல் போன்ற நீர் நிலைகளுக்குச் சென்று நீராடி தர்ப்பணம் கொடுக்க வேண்டும். ராகு காலம், யமகண்டம் ஆகியவற்றை தர்ப்ப ணத்துக்கு பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. தர்ப்பணம் கொடுக்க மதிய வேளை மிகவும் சிறந்ததாகும்.

தர்ப்பணம் கொடுக்கும்போது தங்களின் கோத்திரம், குலதெய்வம், தந்தை வழி மற்றும் தாய் வழியில் மூன்று தலைமுறையினரின் பெயர்களைச் சொல்லி, தர்ப்பணம் கொடுப்பது அவசியம்.

தர்ப்பணம் செய்த பின்னர் வீட்டுக்குத் திரும்பி வந்து, மறைந்த முன்னோர்களின் படத் தைச் சுத்தம் செய்து, வடகிழக்கு திசையில் வைத்து சந்தனம், குங்குமம் இட்டு துளசி மாலை சாத்த வேண்டும். முன்னோர்கள் பயன்படுத்திய பொருட்களை வைத்து குத்துவிளக்கு ஏற்ற வேண்டும். முன்னோர்களுக்குப் பிடித்தமான இனிப்பு, காரம், பழ வகைகளைப் படைக்க வேண்டும். தலை வாழை இலையில் படையல் போட்டு வணங்க வேண்டும்.

கோதுமை தவிடு, அகத்திக்கீரை போன்ற வற்றை பசுவுக்கு தானமாக வழங்க வேண்டும்.

பித்ருக்களுக்கு தர்ப்பணம் செய்து முடிக்கும்வரை, வீட்டில் தெய்வ சம்பந்தமான பூஜைகளை ஒத்திவைத்து விட்டு, பித்ருக்களுக்கு தர்ப்பணம் செய்து முடித்த பின்னர் தினசரி செய்ய வேண்டிய பூஜைகளைச் செய்யலாம்.

**செய்யக் கூடாதவை**

அமாவாசை தினங்களில் மாமிசம் சாப்பிடக் கூடாது. வெங்காயம், பூண்டு ஆகியவற்றையும் தவிர்க்க வேண்டும்.

தர்ப்பணம் செய்யும்போது, கறுப்பு எள்ளை மற்றவர்களிடம் இருந்து கடனாக வாங்கக்கூடாது.

நீரில் இருந்து கொண்டு கரையில் தர்ப்பணம் செய்யக்கூடாது.

அதேபோல் கரையில் இருந்து கொண்டு நீரிலும் தர்ப்பணம் செய்யக்கூடாது. நீரில் இருப்பவர்கள் நீரிலும், கரையில் இருப்பவர்கள் கரையிலும் தான் தர்ப்பணம் கொடுக்க வேண்டும்.*

தர்ப்பணத்தை எப்போதும் கிழக்கு முகமாக பார்த்தபடிதான் கொடுக்க வேண்டும்.

**காகத்துக்கு சாதம் படைப்பது ஏன்?**

அமாவாசை வழிபாட்டில் காகத்துக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

அன்று காகத்துக்கு சாதம் வைத்து அது சாப்பிட்டப் பின்னரே உணவருந்தும் பழக்கம் நடைமுறையில் உள்ளது.



சனீஸ்வர பகவானின் வாகனமான காகம், யமலோகத்தின் வாசலில் இருப்பதாகவும், அது யமனின் தூதுவன் எனவும் கூறப்படுகிறது.

காகத்துக்கு சாதம் வைத்தால், யம லோகத்தில் வாழும் நமது முன்னோர்கள் அமைதியடைந்து நமக்கு ஆசி வழங்குவார்கள் என்று சாஸ்திரம் கூறுகிறது.

காகம் சாதத்தை எடுக்காவிட்டால், முன்னோர்களுக்கு ஏதோ மனக்குறை இருப்பதாக கருதுவது மக்களின் நம்பிக்கை.

**துயர் போக்கும் துளசி:**

பித்ருக்களுக்கு கண்கண்ட தெய்வமாக விளங்குபவர் மகாவிஷ்ணு. அவரை துளசி மாலை சாத்தி வழிபடுவது விசேஷம்.

அமாவாசையன்று பித்ருக்கள் வழிபாட்டின் போது, வீட்டில் முன்னோர்களின் படத்துக்கு துளசி மாலையோ, துளசி இலையோ சமர்ப்பிக்க வேண்டும். இது மகா விஷ்ணுவை மகிழ்விக்கும். இதனால் பித்ருக்களுக்கு விஷ்ணுவின் ஆசி கிடைக்கும். அவர்கள் மகிழ்ச்சியில் தமது சந்ததியினரை வாழ்த்துவார்கள். அதன் மூலம் நமது துயர்நீங்கி வாழ்வில் சுபீட்சம் ஏற்படும்.

(தை அமாவாசைக்கு உகந்த தலங்களைப் பற்றி 26ம் பக்கத்தில் விரிவாக பார்க்கலாம்.)

# விவரிக்க முடியாத முழு முதற்பொருள்

பூஜ்ய குருதேவர் அருளுகிறார்: “உருவமற்ற இறைவன் விவரிக்கப்படவோ அல்லது அறிவின் உதவியினால் புரிந்துகொள்ளப்படவோ கூட முடியாதவன். முழுமுதற்பொருளை நீங்கள் அறிய முடிவதற்கான ஒரே வழி பரம்பொருளுடன் ஒன்றிணைந்திருப்பதாகும். உருவமுள்ள இறைவனை மட்டுமே உங்களால் சிந்திக்கவோ அல்லது வழிபடவோ முடியும். எந்த ஒரு மனிதரிடமும், எந்தவித உருவ சம்பந்தமான கருத்துக்களையும் பயன்படுத்தாமல் இறைவன் எதைப் போன்றிருப்பான் என்று அவரால் தெரிவிக்க முடியுமா என நான் கேட்கலாம்.

அவரால் முடியாது. இறைவனது அன்பைக் குறித்து நீங்கள் சிந்திக்கும் பொழுது, உங்களது இதயத்தில் நீங்கள் உணர்ந்திருக்கின்ற மனித அன்பைக் குறித்தே நீங்கள் சிந்திக்கிறீர்கள். மேலும் இறைவனது அன்பை அதைவிடப் பெரியதாக நீங்கள் கற்பனை செய்கிறீர்கள்.

உங்களுக்குத் தெரிந்தவர்களிடத்தில் அல்லது மகான்களின் வாழ்க்கைளில் இன்னும் அதிக முழுமையாக நற்பண்பு, அன்பு, அறிவு ஆகியவை உடலுருக்கொண்டிருப்பதால், இவற்றை இறைவனது பண்பு நலன்களாக உங்களால் கருத முடிகிறது. மேலும் அவன் கருணையானவன், நல்லவன், அழகானவன் எனவும் அவன் ஞானம் மற்றும் அன்பு வடிவமானவன் எனவும் உங்களால் கூற முடிகின்றது. அவன் எவ்வளவு தெளிவாகப் புரியக் கூடியவனாக இருக்கிறான் பார்த்தீர்களா? ஆனால் இறைவனது தெய்வீகப் பண்பு நலன்களின் ஓர் உருவமுள்ள உதாரணம் இல்லாமல், நம்மால் அவனை கற்பனை செய்யவே முடியாது. நமது சொந்த உடல் உணர்வு நிலையுடன் நாம் அடையாளம் கொண்டிருக்கும் வரை, உருவமற்ற அம்சத்தைவிட உருவமுள்ள அம்சத்திலேயே, நமக்கு இறைவன் மிகவும் உண்மையானவனாக விளங்குவான்.

எனவே முதலில் அவனை உருவமுள்ள இறைவனாக உணர்ந்தறிவதற்கு முயலுவது எளிதானதாகும். (நிர்குண பிரம்மத்தை இலக்காகக்கொண்டி ருப்பவர்களுக்கு இன்னல்கள் மிக அதிகம். முழு முதற்பொருளை அடையும் மார்க்கம். உடலுணர்ச்சி உடையவர்களுக்குக் கடினமானது). (பகவத் கீதை அத் 12, ஸ்லோகம் 5) உண்மையில் காணக்கூடியதன் வாயிலாகவே நாம் அவனை அணுகவேண்டும். ஏனெனில் அது நமக்கு அதிக அளவில் தெளிவாகப் புரியக் கூடியதாக இருக்கின்றது. இந்தக் காரணத்திற்காகவே பெரிய மகான்கள் பூமிக்கு அனுப்பப்படுகின்றனர்.



இறைவனுடன் ஒன்றிணைந்திருந்தாலும், அவர்கள் எலும்புகளும் சதையும் கூடிய ஓர் உடலினைப் பெற்றிருக்கின்றனர். இந்த வகையில், தனது குழந்தைகளுக்கு வழி காட்டுவதற்கும் மனவெழுச்சியூட்டுவதற்கும் இறைவன் விரும்பிய மாத்திரத்தில் ஓர் உடலினை தருகின்றான். ஆயினும் அவனை எந்த ஓர் உடலுடனும் வரம்பிற்குட்படுத்த முடியாது. ஏனெனில் அவன் பிறந்து இறப்பதாக அது பொருள்பட்டுவிடும். அவன் வரம்பிற்குட்படாதவனாக இல்லாமல், வரம்பிற்குட்பட்டவனாக ஆகிவிடுவான். அவன் இறைவனாக இருக்கமாட்டான்.”

குணபாவத்தினூடே (குணவடிவமாக) இறைவனை ஆராதனை செய்வதற்கும் ஸகுணபக்தியை வளர்ப்பதற்கும் மிகவும் கடினமாகும். அந்த நிலைக்கு நிர்குணபக்தியை வளர்த்துவதற்கும் நிர்குணபாவத்தில் இறைவனை ஆராதிப்பதற்கும் அதைவிட மிக அதிகம் கஷ்டமுண்டு என்று சொல்லவேண்டியதில்லை. உடல் உணர்ச்சி சிறிதளவாவது இருக்கும் வரை இறைவனுடைய உருவத்தை மறக்க முடியாது.

இறைவனுடைய உருவங்களை மறக்கும்பொழுதுதான் ஒருவருடைய சித்தத்திற்கு நிர்குண பிரம்மத்தை சிந்திப்பதற்கு முடியும். அது வரையில் இறைவனை இஷ்டதேவதாஸ்வரூபத்தில் சேவிப்பதுதான் நல்லது. அதன் பின்னர்தான் நிர்குணபிரம்மத்தைச் சிந்திப்பதற்கே இயலும்.

இவ்வாறு இறைவனை இஷ்ட தேவதாஸ்வரூபத்தில் உபாஸனை செய்து பக்தி வளரும்போது சித்தசுத்தி உண்டாகும். அதன் பின்னர் விருப்பு வெறுப்பு காம, குரோதம் போன்ற எல்லா தீயகுணங்களும் அடங்கி அனைத்துள்ளும் அவன் இருக்கின்றான்; அவன் அனைத்துமாக இருக்கின்றான் என்பதை உணர்ந்தறிந்தால் நிர்குண பிரம்மத்தை உபாசிக்க முடியும். (பகவத்கீதா அத் 12 ஸ்லோகம்5)

நிர்குணப்பிரம்மத்தைதச் சேவிப்பதும் அதனுடன் இணைவதென்ற குறிக்கோளும்தான் சாலச்சிறந்தது. அந்தக் குறிக்கோளை உருவாக்குவது மிகவும் கடினம். ஓர் ஆத்மாவின் இறுதி இலக்கு அதுதான். அதுவே பேரிலக்காகும். எவ்வாறு அந்த நிலையை கைப்பற்றலாம் என்றால் ஆசைகள் சிறிதளவு கூட மீதியின்றி அனைத்தையும் கைவிட வேண்டும். பக்தி அல்லது இறைவனிடத்திலுள்ள பேரன்பு அதிகமானால்தான் அவற்றைக் கைவிட முடியும். பின்னர் கிரியாயோகப் பயிற்சி ஒன்றினால் மட்டும் தான் நிர்குணப்பிரம்மத்தை அடைய முடியும்.

மேலும் அதற்கான சில விஷயங்களை குருதேவர் அருளியுள்ளார்: “சரியான செயலின் பெற்றோர் அமைதியே” என்பதை அவர் சுட்டிக் காட்டுகிறார். அது என்னவெனில் ”நீங்கள் உணர்ச்சிக்கு அடிமைப்படுவதிலிருந்து சுதந்திரம் அடையும்போது, நீங்கள் ஆன்மீகக் கூருணர்ச்சி உடையவராகிறீர்கள். ஆனால் அதன்பின் நீங்கள் உலகவிஷயங்களைப்பற்றி அதீத உணர்ச்சி கொண்டிருக்க மாட்டீர்கள்.

வலியை உணர்வீர்கள், ஆனால் அதனால் பாதிப்படையவதில்லை. நீங்கள் இந்த உலகைப் பார்க்கிறீர்கள், ஆனால் இது முடிவான மெய்ம்மை இல்லை என அறிகிறீர்கள், நீங்கள் உங்கள் ஆன்மாவின் அமைதியான இயல்பில் நிலைத்து உடல் மற்றும் மனதில் ஒவ்வொரு வரம்பிற்கும் அப்பாற்பட்டு இருக்கிறீர்கள்.

என்ன அற்பமான பயிற்சியை உலகம் உங்களுக்கு கொடுக்கிறது என நீங்கள் நன்றாகவே புரிந்துகொள்ள முடியும். தந்தை குழந்தைகளிடம் கோபத்தைக் காட்டுகிறார். இல்லையென்றால் அன்னை காரணமின்றி திட்டுகிறார். குழந்தைகளுக்கு என்ன ஓர் உதாரணம்! அவர்களுக்கு முன்னால் வைப்பதற்காக என்ன ஒரு காட்சி! குழந்தைகளுக்கு முறையான பயிற்சியைக் கொடுக்க விருப்பம் இருந்தாலொழிய அவர்களைப் பெற்றுக் கொள்ளாமல் இருப்பது நல்லது. சரியான ஒழுக்கத்தைக் கொடுக்க மறுத்து நீங்கள் அவர்களை வாழ்க்கை முழுவதும் துன்பத்தில் ஆழ்த்துகிறீர்கள். அவர்கள் அவர்களாக தங்கள் உண்மை ஆன்மாக்களாக இருப்பதைத் தடைசெய்யும் பழக்கங்களை அவர்கள் ஏற்படுத்திக்கொள்கிறார்கள். நல்ல பழக்கங்கள் நிச்சயம் நமக்கு உதவி செய்கிற நண்பர்களைப் போலாகும். ஆனால் தவறான பழக்கங்கள் நம்மை அரக்கர்களாக மாறத்தூண்டிவிடும். ஒரே வீட்டில் ஒருவர் அமைதியுடன் எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டு போவதையும் வேறொருவர் எல்லா நேரமும் கோபம், பொறாமை,

51
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு மேம்படுவதற்காக

மற்ற தொல்லை கொடுக்கும் உணர்ச்சிவேகம் ஆகியவற்றுடன் கொதித்துக் கொண்டிருப்பதையும் காணலாம். நீங்கள் எப்பொழுதும் அமைதியாக இருக்க முடிந்தால் அது மிகவும் நல்லது அல்லவா? இறைவன் பொறுமை இழந்தால் இந்த உலகத்திற்கு என்ன நடக்கும் என்பதை யோசிக்கவும்! அவனுக்கு உணர்வின்மேல் முழு கட்டுப்பாடு உள்ளது. அவன் எல்லாவற்றிலும் வியாபித்திருக்கும் காரணத்தால், படைப்பவனாக இங்கே என்ன நடந்து கொண் டிருக்கும் என்று அறிகின்றபோதிலும் அவனுடைய ஒரு பகுதி, அவனது முழுமையான இயல்பு, ஒரு போதும் அமைதியற்று இருந்ததில்லை. ஆகவே நாமும் அவனைப்போலவே, நம்மைச் சுற்றிக் குழப் பங்கள் இருந்தாலும், ஆன்ம இயல்பில் எப்போதும் அமைதியாக இருக்க வேண்டும்.

ஒருவர் மிகுந்த கோபத்துடன் கொதித்துக் கொண்டு மூர்க்கத்தனமான நிலையில் என்னிடம் வரும்போது அவர் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார் என்பதை நான் காண்கிறேன். நான் என்ன கூறி னாலும் சரி, அவருடைய மனக்கிளர்ச்சியுற்ற நிலை யினால் அவர் புரிந்துகொள்ளமாட்டார். ஆனால் நான் என்னையே கட்டுப்பாட்டில் வைத்திருந்தால், நான் அவரை அமைதிப்படுத்தி அவர் நியாயத்தை ஏற்றுக்கொள்ளச் செய்ய முடியும்வரை அவரை இணக்கமாக்க முடியும். என் ஆன்மாவின் அந்த அமைதியை நான் ஒருபோதும் இழந்ததில்லை. நான் அதை இழந்திருந்தேனானால், என் மனம் என்ன காரணம் அளித்திருந்தாலும் கடவுளை இழந்திருப்பேன். அகத்தே நீங்கள் எப்பொழுதும் முழு நிறைவான அமைதியில் நங்கூரமிட்டிருக்க வேண்டும். ஒருவர் கோபத்தில் உங்களிடம் வரும்போது, உங்களுடைய கய கட்டுப்பாட்டில் இருங்கள். "நான் நிதானத்தை இழக்கமாட்டேன். அவருடைய உணர்வு மாறும்வரை நான் அமைதியை தொடர்ந்து வெளிப்படுத்திக்கொண்டே இருப்பேன்." அப்பொழுது நீங்கள் சித்தத்தின் முழுமையான கட்டுப்பாட்டை நிரூபித்துக்கொண்டிருக்கிறீர்கள்.

மேலும் அவர் கூறுகிறார்: "அமைதியான உணர்வைப் பெற்றிருப்பது என்பது நீங்கள் எப்போதும் புன்னகைத்துக்கொண்டும் ஒவ்வொருவருடனும், அவர்கள் என்ன கூறினாலும் சரி, உடன்பட்டும் இருப்பதாக அர்த்தம் இல்லை; நீங்கள் உண்மையை மதிக்கிறீர்களானால் அதைக்கொண்டு எவரையும் கோபமூட்ட விரும்பவில்லை என்பதில்லை. இது ஒர் உச்சபட்சத்திற்குச் செல்வதாகும். தம்முடைய நல்ல இயல்பு புகழப்படவேண்டும் என்ற ஆசையினால் ஒவ்வொருவரையும் இன்பமுறச்செய்ய இம்மாதிரி முயற்சி செய்பவர்கள் உணர்வுக் கட்டுப்பாட்டை அவசியம் பெற்றிருப்பதில்லை. உங்கள் நடத்தை நேர்மையாக இருந்தால் இனிமையாகவும் உடன்பட்டும் இருப்பது நல்லதாகும். உணர்வுக் கட்டுப்பாட்டைப் பெற்றிருக்கும் எவரும் உண்மையை பின்பற்றுகிறார். அவரால் முடிகின்ற இடத்திலெல்லாம் அந்த உண்மையைப் பகிர்ந்து கொள்கிறார். மேலும் எவ்வழியிலும் ஏற்றுக் கொள்ளாத எவரையும் தேவையின்றி கோபப்பட வைப்பதைத் தவிர்க்கிறார். அவர் எப்போது பேச வேண்டும், எப்போது அமைதி காக்க வேண்டும் என்பதை அறிவார். ஆனால் அவர் ஒருபோதும் தனது சொந்த இலட்சியங்களையும் அக அமைதியையும் விட்டுக்கொடுக்கமாட்டார். இத்தகைய ஒரு மனிதர் இந்த உலகில் மிகச்சிறந்த நன்மைக்கான ஆற்றலுடையவராவார்".

குருதேவர் கூறியுள்ளவாறு, விதிமுறைகளையும் கோட்பாடுகளையும் கடைபிடித்து வாழும் ஒருவர், நிர்குணபரப்பிரம்மத்தை இலக்காகக்கொள்வதற்கும் அதை அடைவதற்கும் தகுதியுடையவராவார் என்பது புலப்படுகிறது. போர்க்களமாக மாறிக் கொண்டிருக்கும் இவ்வுலகத்தில் மனித வாழ்வு மிகுந்த பயத்தை ஏற்படுத்துகின்றது. எதற்காக பயந்து வாழவேண்டும்? சுதந்திரமாகவே வாழலாமே! நமக்கு இறைவன் சுதந்திரத்தை அருளியுள்ளான். அதைப் பயன்படுத்தி அந்தப் பயத்தை போக்க வேண்டும்! அந்தப் பயத்தைப் போக்குவதற்காக இறைவனை, இறைவனை மட்டும் நம்முடன் வைத்துக் கொள்ள வேண்டும். எப்படி அவன் நமக்குக் கிடைப்பான்? யோகத்தால், தியானத்தால் அவனைத் தேடிப் பெறவேண்டும். அவனை நாம் சொந்தமாக்கிக்கொண்டால் எல்லா பயமும் தீர்ந்து விடும்!

மீண்டும் மலரும்...

குருப்ரியா Cell No.9894595909

மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
"ஆன்மிகமலர் மெயில் புத்தகம்"
aanmeegamalar.com
இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு
செய்தும் படிக்கலாம்

aanmeegamalar.com
இணையதளத்தின்
mobile app
GET IT ON Google Play
அனைத்து செய்திகளும், இ-புத்தகத்தையும்
இனி உங்கள் மொபைலில் படித்து மகிழலாம்.
ஆன்மிகமலர் .காம்
கூகுல் ப்ளே ஸ்டோரிலிருந்து ஆன்மிகமலர்
Aanmeega malar (mobile app)
டவுண்லோடுசெய்து, ஆன்மிக செய்திகள்,
உடல்நலன், பலன்கள், இ-புத்தகம் போன்றவற்றை
எளிதாக படிக்கலாம். சிறிய, பெரிய எழுத்துக்களில்
பெரியவர்களும் தெளிவாக படிக்கலாம்.
அனைத்து ANDROID சாதனத்திலும் எளிதாக இன்ஸ்டால் செய்யலாம்




ஆசிரியர், வெளியீட்டாளர்
C.N.ராஜா
செல்: 8825844033

இணை ஆசிரியர்
முருகன் செல்: 7338881773

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர், சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
மூ.சக்திவேல் செல்: 9787576858
புனிதவேல் செல்: 9841807572

வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033

ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
08825844033



# கிணற்றுத் தவளை

ஒரே ஒரு ஊரில் முட்டாள் வியாபாரி ஒருவன் இருந்தான். கழுதையின் முதுகில் ஒரு பெரிய நெல் முட்டையை ஏற்றினான். ஒரு பக்கமாக சாய்ந்த நெல் மூட்டையின் கனத்தைச் சரி செய்ய மறுபக்கம் அதே எடையுள்ள மண் மூட்டையை ஏற்றினான். கழுதை சிரமப்படக் கூடாது என்பது அவன் எண்ணம். அந்த வழியாகச் சென்ற ஒரு ஏழை, வியாபாரியைப் பார்த்து ஏன் கழுதை மேல் அவ்வளவு சுமையை ஏற்றுகிறாய்?.. நெல் மூட்டையை இரண்டாகப் பகிர்ந்து பக்கத்திற்கு ஒன்றாக ஏற்றேன். கனம் சரி சமமாக இருக்கும் என்றான்.வியாபாரிக்கு கோபம் வந்தது. உன்னிடம் எவ்வளவு பணம் உள்ளது? என்றான். என்னிடம் ஒன்றும் இல்லை என்றான் ஏழை. அப்படியானால் என்னிடம் பேசாதே. உன் அபூர்வ சிந்தனைகளை உன்னிடமே வைத்துக் கொள். உன் பேச்சைக் கேட்டால் நானும் உன்போல் ஏழை ஆகிவிடுவேன் என்றான் வியாபாரி.

அந்த முட்டாள் வியாபாரி போல்தான் நம்மில் அநேகர் இருக்கிறோம். ஞானிகள், மகான்கள் சொல்வதைக் கேட்காமல் நம் இஷ்டப்படி நடந்து வாழ்க்கையில் கஷ்டப்படுகிறோம். இந்த முட்டாள்தனத்தை மாற்றிக் கொள்ள வேண்டாமா?

ஒரு தேசத்தில் அடிமைகள் அநேகம் பேர் சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர். அவர்களைப் பார்க்க கனவான் ஒருவன் ஒருநாள் வந்தான். அவர்களின் கஷ்டத்தைப் பார்த்து நல்ல உணவு வகைள் தரும்படி அதிகாரிகளுக்குச் சொல்லி அதற்கு பணமும் தந்தான். மற்றொரு நாள், இன்னொரு வள்ளல் வந்து நல்ல உடைகளை தந்து உதவினான்.

இன்னொரு நாள் வேறொரு தனவந்தன் வந்து மருந்துகளை கொடுத்து உதவினான்.

எல்லோரும் அடிமைகளுக்கு மனமுவந்து உதவிகள் செய்தனர். ஆனால், அவர்கள் அடிமைகளாகவே இருந்தனர். கடைசியில் பணம் ஏதுமில்லா ஒரு ஞானி வந்தான். ஆனால் அவன் கையில் சிறைக் கதவுகளின் சாவி இருந்தது. கதவைத் திறந்துவிட்டான். இனி நீங்கள் சுதந்திரப் பறவைகள். உங்கள் சொந்த இடத்திற்குப் போங்கள்..என்றான்.

குழந்தைகளே! இந்த நால்வரில் யார் மிகவும் உயர்ந்தவர்? ஞானிகள்தானே..

இந்த உலகம் என்ற சிறையில் அடிமைகளாக இருக்கும் நம்மை பக்தி, கருணை..என்ற சாவிகளைக் கொண்டு விடுவிக்க வந்திருக்கும் ஞானிகளிடம் நாம் அன்பாக இருக்க வேண்டாமா? ஒரு கிணற்றில் தவளை ஒன்று இருந்தது. அங்கு கொக்கு ஒன்று வந்தது, “நீ யார்? எங்கிருந்து வருகிறாய்?” என்றது தவளை. “நான் ஒரு பறவை. ஏரி, குளம்.. முதலிய இடங்களில் இருப்பேன்” என்றது கொக்கு.

“நீ இருக்கும் இடம் இதைவிட அழகானதா” என்றது தவளை. “ஆமாம் இதைவிட அழகானது. பெரியதும் கூட” என்றது கொக்கு. “உளராதே. இந்த பெரிய இடத்தை விடவா பெரிது”.. என்று சொல்லி கிணற்றை சுற்றி வந்து களைப்புடன் அமர்ந்தது. “இதைவிட மிகமிகப் பெரியது என்றது..கொக்கு”. “உன்னுடன் பேசி என் நேரத்தை வீணாக்கினேன் பார். இதைவிட அழகானது பெரியதே கிடையாது”..என்று சொல்லி விட்டு கிணற்றுக்குள் மறைந்தது தவளை. நாம் நடத்தும் சாதாரண உலக வாழ்க்கையைவிட உயர்ந்த அழகான தூய்மையான வாழ்க்கை ஒன்று இருக்கிறது. என்று சொல்லும் ஞானிகளை, மகான்களை அந்த கிணற்றுத் தவளைப் போல தூக்கி எறிகிறோமே. நியாயமா? சிந்திக்க வேண்டாமா?



ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு
சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது
மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028

• ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

## தை அமாவாசை

# தர்ப்பணம் கொடுக்க உகந்த தலங்கள்

பொதுவாக அமாவாசைகளில் கோயில்களில் தர்ப்பணம் தருவது சிறப்பு, இதில் தை மாதம் வரும் அமாவாசையில் கீழ்கண்ட திருத்தலங்கள் மிகுந்த பலனைத் தரும். அத்தலங்களைப் பற்றி பார்ப்போம்.

ராமேஸ்வரம், திலதர்ப்பணபுரி, திருப்புல்லாணி, திருவள்ளூர், ஸ்ரீரங்கம் அம்மா மண்டபம், திருவெண்காடு, திருவாரூர், விளமல் பதஞ்சலி மனோகரர் கோயில், கருங்குளம், அகரம், பவானி கூடுதுறை, திருப்புள்ளம்பூதங்குடி, திருக்கண்ணபுரம் என்று பல தலங்கள் இருக்கின்றன.

### ராமேஸ்வரம்:

இந்தியாவில் உள்ள பன்னிரண்டு ஜோதிர் லிங்கத் தலங்களில் ஒன்றான ராமேஸ்வரம் பித்ரு வழிபாட்டுக்கு உகந்த தலங்களில் ஒன்று.

ராவணனைக் கொன்ற பிரம்மஹத்தி தோஷம் நீங்க வேண்டி, ராமபிரான் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து வழிபட்ட திருத்தலம். இந்தத் தலத்தில் உள்ள தீர்த்தங்களில் அக்னி தீர்த்தம், பித்ரு தோஷத்தைப் போக்கும் ஆற்றல் கொண்டது. இந்த அக்னி தீர்த்தத்துக்குப் பெயர் வந்தது பற்றி ஒரு புராண வரலாறு சொல் லப்படுகிறது.

ராமபிரானின் உத்தரவின்படி சீதாபிராட்டி அக்னி பிரவேசம் செய்தபோது, பிராட்டியை தீண்டிய தோஷம் நீங்க *அக்னி பகவான்* இங்குள்ள கடலில் நீராடி தோஷம் நீங்கப்பெற்றதால், இந்தத் தீர்த்தத்துக்கு அக்னி தீர்த்தம் என்ற பெயர் ஏற்பட்டது.இன்னொரு காரணமும் சொல்வர். அதாவது, பிராட்டியின் கற்பின் வெப்பம் அக்னிபகவானைத் தகித்ததாகவும், அக்னி பகவான் இங்குள்ள கடலில் நீராடி வெம்மையைப் போக்கிக் கொண்டதாகவும் சொல்கிறார்கள்.

ராமேஸ்வரம் தீவின் தென் பகுதியில் உள்ள தனுஷ்கோடியின் கிழக்குக் கடற்கரைப் பகுதியே அக்னி தீர்த்தமாக புராணங்களில் சொல்லப்பட்டு இருக்கிறது. பிற்காலத்தில் தனுஷ்கோடி கடல் சீற்றத்துக்கு ஆளாகப்போவதை தமது தீர்க்க தரிசனத்தால் உணர்ந்த ஸ்ரீஆதிசங்கரர், அந்த அக்னி தீர்த்தத்தை எடுத்து இப்போது ராமேஸ்வரத்தில் அக்னி தீர்த்தம் உள்ள இடத்தில் பிரதிஷ்டை செய்ததாகச் சொல்லப்படுகிறது.

இங்கே ஆடி, புரட்டாசி, தை அமாவாசை மட்டுமல்லாமல், ஒவ்வொரு அமாவாசையன்றும்



ஆயிரக்கணக்கான பக்தர்கள் முன்னோர் வழிபாடு செய்து, பித்ரு தோஷம் நீங்கப் பெறுகின்றனர்.

### திலதர்ப்பணபுரி:

திருவாரூர் மயிலாடுதுறை சாலையில் 20கி.மீ தொலைவில் அமைந்துள்ளது "பூந்தோட்டம்". இங்கு தான் "சரஸ்வதி" கோயில் அமைந்துள்ளது. இங்கிருந்து 4 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது திலதர்ப்பணபுரி. தற்போது திலதைப்பதி என்றும், செதலப்பதி என்றும் அழைக்கப்பெறுகிறது. இந்தத் தலத்தில் விநாயகர் மனித முகத்துடன் ஆதி விநாயகராகக் காட்சி தருகிறார். முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுக்க உகந்த தலங்களில் ஒன்று.

தசரதருக்கும், ஜடாயுவுக்கும் சிராத்தம் செய்ய எண்ணி இந்தத் தலத்துக்கு வந்த ராமபிரான், இங்கே "பித்ரு தர்ப்பணம்" செய்தார். ராமபிரான் எள்ளும் நீரும் கொண்டு தர்ப்பணம் கொடுத்ததால், இந்தத் தலத்துக்கு திலதர்ப்பணபுரி என்று பெயர் ஏற்பட்டது. ராமர் தர்ப்பணம் செய்தபோது பிடித்து வைத்த நான்கு பிண்டங்கள் லிங்கங்களாக மாறின. அந்த நான்கு லிங்கங்களையும் கருவறையின் பின்புறத்தில் தரிசிக்கலாம். இந்த லிங்கங்களுக்கு அருகில் வலக் காலை மண்டியிட்டு வடக்கு நோக்கி அமர்ந்திருக்கும் கோலத்தில் ராமபிரானை தரிசிக்கலாம். இந்த வடிவத்தில் ராமபிரானை எங்கும் தரிசிக்க முடியாது.

நாம் தர்ப்பணம் கொடுக்கும் முன்னோர்களுக்கு இறைவன் முக்தியைத் தருவதால், முக்தீஸ்வரர் என்ற திருப்பெயர் ஏற்பட்டது. இந்தத் தலத்தில் சூரியனும் சந்திரனும் அருகருகில் இருப்பதால், நித்திய அமாவாசை திருத்தலம் என்ற சிறப்பும் இந்தத் தலத்துக்கு உண்டு.

காசியில் கங்கை நதி வடக்கில் இருந்து தெற்கு நோக்கிப் பாய்வதுபோல் இங்கே காவிரியின் துணை நதியான அரசலாறு, வடக்கில் இருந்து தெற்கு நோக்கிப் பாய்வதால், இத்தலம் காசிக்கு நிகராகப் போற்றப்படுகிறது.

### திருப்புல்லாணி:

ராமேஸ்வரத்துக்கு அருகில் உள்ள தலம். இந்தத் தலத்தில் உள்ள ஆதிஜகந்நாத பெருமாள், தசரதருக்கு புத்திர பாக்கியம் அருளியதால், பெரிய பெருமாள் என்று அழைக்கப்படுகிறார். இலங்கைக்கு பாலம் அமைக்க அருகில் இருந்த சேதுக்கரையில் முகாம் இட்டிருந்த ராமபிரான், ஆதிசேஷன் மீது தர்ப்பை விரித்து சயனக்கோலத்தில் திருக்காட்சி அருள்கிறார்.

ராமன் இங்கு தங்கியிருந்த காலத்தில், சீதாதேவி ராவணனால் கடத்திச் செல்லப்பட்டிருந்தார். லட்சுமணனோ, ராமர் சயனம் கொள்ள ஆதிசேஷனாகவும் மாறிவிட்டபடியால், சீதை மற்றும் லட்சுமணரை இந்தக் கோயிலில் நாம் தரிசிக்க முடியாது.

இந்தத் தலத்தில் சேதுக்கரையில் உள்ள தீர்த்தம் "ரத்னாகர தீர்த்தம்" என்று அழைக்கப்படுகிறது. இந்தத் தீர்த்தத்தில் நீராடி பித்ருக்களுக்கு தர்ப்பணம் கொடுப்பது விசேஷம்!

### திருச்செந்தூர்:

அழகு முருகன் சூரனை சம்ஹாரம் செய்து வாகனமாகவும் கொடியாகவும் கொண்ட திருத்தலம் திருச்செந்தூர். முருகப்பெருமானின் படைவீடுகளில் கடற்கரையில் அமைந்திருக்கும் ஒரே தலம் திருச்செந்தூர். எனவே ஆடி, தை மற்றும் மஹாளய அமாவாசை புண்ணிய தினங்களில், இங்கு வந்து பித்ரு ஆராதனை செய்வது சிறப்பு என்பது ஐதீகம்.

காயத்ரி மந்திரத்தின் 24 எழுத்துகளும் இந்தத் தலத்தில் தீர்த்தங்களாகித் திகழ்வதாகக் கூறப்படுகிறது. இவற்றில் பலவும் மணல் மூடி தூர்ந்து விட்டனவாம். தற்போது, சமுத்திரத்திலும் கந்த புஷ்கரணி எனப்படும் நாழிக் கிணற்றிலும் மட்டுமே பக்தர்கள் நீராடி வருகிறார்கள்.

திருச்செந்தூரில் இருந்த 24 தீர்த்தங்களில் தென்புலத்தார் தீர்த்தமும் ஒன்று என்றும், அந்தத் தீர்த்தத்தில் மூழ்கி, பித்ருக்களுக்கு எள்ளும் தண்ணீரும் இறைத்து தர்ப்பணம் கொடுப்பதால், பித்ருக்கள் மகிழ்ச்சி அடைவதுடன், அவர்களுடைய ஆசீர்வாதமும் நமக்குக் கிடைக்கும் என்பது ஐதீகம்.

### திருவெண்காடு:

சீர்காழி பூம்புகார் சாலையில், சீர்காழியில் இருந்து சுமார் 13 கி.மீ.தொலைவில் திருவெண்காடு அமைந்திருக்கிறது. நவகிரகங்களில் புதனுக்கு உரிய தலம் "திருவெண்காடு."

காவிரிக்கரையில் காசிக்கு நிகராக அமைந்திருக்கும் 6 சிவ க்ஷேத்திரங்களில் திருவெண்காடும் ஒன்று.

இந்தக் கோயிலில் அக்னி தீர்த்தம், சூரிய தீர்த்தம், சந்திர தீர்த்தம் என்று மூன்று தீர்த்தங்கள் இருக்கின்றன. சந்திர தீர்த்தத்தின் அருகில் உள்ள ஆலமரத்தின் அடியில் ருத்ர பாதம் பிரதிஷ்டை செய்யப்பட்டு இருக்கிறது.

தை அமாவாசை நாளில் இங்குள்ள சந்திர தீர்த்தத்தில் நீராடி, ருத்ர பாதம் பிரதிஷ்டை செய்யப்பட்டு இருக்கும் ஆலமரத்தின் அடியில் பித்ருக்களுக்கு தர்ப்பணம் கொடுத்தால், நம் முன்னோர்களின் ஆசிகள் நமக்குக் கிடைக்கும்.

### பவானி கூடுதுறை:

வட இந்தியாவில் கங்கையுடன் யமுனை, சரஸ்வதி நதி இரண்டும் சங்கமிக்கும் தலம் 'திரிவேணி சங்கமம்' (அலகாபாத்)* எனப்

படுகிறது. இங்கு, சரஸ்வதி நதி கண்ணுக்குத் தெரிவதில்லை. அதுபோல், தமிழகத்தில் பவானி, காவிரி மற்றும் கண்ணுக்குப் புலப்படாத அமிர்த நதி என மூன்று நதிகளும் கூடும் இடம், 'தென் திரிவேணி சங்கமம்' என்று அழைக்கப்படுகிறது.

பவானி கூடுதுறை (ஈரோடு மாவட்டம்). இந்த கூடுதுறையில் கோயில் கொண்டிருப்பவர், ஸ்ரீசங்கமேஸ்வரர்.

பவானி கூடுதுறை, பாவம் போக்கி புண்ணியம் அளிக்கும் சக்திமிக்க தலமாகத் திகழ்வதால், ஆடி அமாவாசை, தை அமாவாசை நாட்களில் இங்கு நீராடி, பித்ருக்களுக்குத் தர்ப்பணம் செய்வது மிகுந்த விசேஷம் என்பது ஐதீகம்.

இங்கு ஒருமுறை குளித்துச் சென்று, ஸ்ரீசங்கமேஸ்வரரை வணங்கினால் முக்தி நிச்சயம் என்பது பக்தர்களின் நம்பிக்கை. அம்மன், நதி, தலம் மூன்றுக்கும் ஒரே பெயர். பார்வதியின் திருநாமங்கள் பலவற்றுள் பவானியும் ஒன்று. இந்தப் பெயரே நதியின் பெயராகவும், தலத்தின் பெயராகவும் அமைந்துள்ளது சிறப்பு.

## திருவிளமர்:

திருவாரூரில் இருந்து சுமார் 3 கி.மீ. தொலைவில் அமைந்திருக்கும் இந்தத் தலம் தற்போது விளமல் என்று அழைக்கப்படுகிறது. பதஞ்சலி முனிவர் வழிபட்ட தலம்.

சிவபெருமானின் ஆடலை தினமும் கண்டு அவரது திருவடியிலேயே இருப்பவர் பதஞ்சலி முனிவர். அவர் தினமும் நடராஜப் பெருமானின் நடனத்தைக் கண்டபின்தான் உணவு உட்கொள்வார். இவரும் வியாக்ரபாத முனிவரும் இறைவனின் அஜபா நடனத்தையும், ருத்ர தாண்டவத்தையும் என்றென்றும் காண வேண்டி வழிபட்டனர். மேலும் திருவடி தரிசனத்தை காண்பித்து அருள வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தனர். இவர்கள் இருவருக்கும் இத்தலத்தில் சிவபெருமான் தனது திருப்பாதம் காட்டி நடனம் ஆடியருளினார். இந்தத் தரிசனத்தை விஷ்ணு, பிரம்மா, முசுகுந்த சக்கரவர்த்தி மற்றும் தேவாதி தேவர்கள் கண்டு களித்தனர். சிவபெருமான் காட்டிய ருத்ர பாதத்துக்கு இன்றளவும் தினமும் பூஜைகள் சிறப்பாக நடைபெற்று வருகிறது. எனவே இத்தலம் திருவடி க்ஷேத்திரம் என்றும், சிவபாத ஸ்தலம் என்றும் போற்றப்படுகிறது.

இறைவன் கிழக்கு நோக்கி மண்ணால் ஆன சுயம்பு மூர்த்தியாக அருள்பாலிக்கிறார். இங்குள்ள மூலவரின் முன்பு தீப வழிபாடு நடக்கும் போது, அந்த ஒளி லிங்கத்தில் பிரதிபலித்து, லிங்கமானது தீப ஜோதியாக தெரிவதை காணலாம்.

அமாவாசை நாளில் திருவாரூர் கமலாலயத் தீர்த்தத்தில் நீராடி, பின்னர் விளமல் பதஞ்சலி மனோகரர் கோயிலுக்கு வந்து, முன்னோருக்கு தர்ப்பணம் செய்து, விளமல் பதஞ்சலி மனோகரரை வழிபடுவது மிக சிறப்பாக கருதப்படுகிறது.

## திருக்கண்ணபுரம்:

திருவாரூரில் இருந்து சுமார் 14 கி.மீ. தொலைவில் உள்ளது "திருக்கண்ணபுரம்".

பஞ்ச கிருஷ்ண தலங்களில் ஒன்றான இந்தத் தலத்தில் பெருமாள் "ஸ்ரீநீலமேகப் பெருமாள்" என்ற திருப்பெயருடன் காட்சி தருகிறார். உற்சவர் "ஸ்ரீசௌரிராஜப் பெருமாள்."

ஒன்பது படித்துறைகளுடன் திகழும் இந்தத் தலத்தின் நித்ய புஷ்கரணியும் விசேஷ மானது. இதன் படித்துறைகள் ஒன்பதும் நவகிரகங்களைக் குறிப்பதாக ஐதீகம். இந்த புஷ்கரணியில் நீராடிவிட்டு, பித்ருக்களுக்கு தர்ப்பணம் செய்தால், முன்னோரின் ஆசிகள் கிட்டும் என்பது ஐதீகம். அப்படிச் செய்ய இயலாதவர்கள், நித்ய புஷ்கரணியில் எள்ளைத் தெளித்துப் பிரார்த்தித்தாலே போதும்; முன்னோரின் ஆசியும், பெருமாளின் அனுக்கிரகமும் கிடைக்கும்.

## கருங்குளம்:

திருநெல்வேலி திருச்செந்தூர் சாலையில் சுமார் 18 கி.மீ. தொலைவில் உள்ளது கருங்குளம். மார்த்தாண்டேஸ்வரன் என்ற மன்னர், தாமிரபரணிக் கரையில் இருந்த கருங்குளம் என்ற பகுதியை ஆட்சி செய்து வந்தார். தினமும் சிவபூஜை செய்ய விரும்பிய மன்னரின் கனவில் தோன்றிய சிவபெருமான், 'தாமிரபரணிக் கரையில் ஆலயம் அமைத்து வழிபடுவாயாக' என்று கூறினார். மன்னரும் அப்படியே ஆலயம் அமைத்து வழிபட்டார்.

இந்த நிலையில், பக்கத்து நாட்டை ஆட்சி செய்து வந்த மன்னர் சிங்கநாதன், தீராத வயிற்று நோயால் அவதிப்பட்டு வந்தார். எந்த வைத்தியராலும் குணப்படுத்த முடியவில்லை. ஒருநாள் மன்னரைச் சந்தித்த முனிவர் ஒருவர், 'முன் ஜன்மத்தில் நீ யாரோ ஒரு மகரிஷியின் சாபத்துக்கு ஆளாகி, இன்றுவரை அதற்கான பலனை அனுபவித்து வருகிறாய். கருங்குளத்து ஈசனை தரிசித்துப் பிரார்த்தனை செய்தால், சாபம் நீங்கப் பெறுவாய்' என்றார். அதன்படி இங்கு வந்த மன்னர், சிவபெருமானை தரிசித்துப் பிரார்த்தித்தார். சாபம் நீங்கப் பெற்று, வயிற்றுவலியில் இருந்து மீண்டார் என்கிறது தல வரலாறு.

மலையடிவாரத்தில் அழகுற கோயில் கொண்டிருக்கிறார் ஸ்ரீமார்த்தாண்டேஸ்வரர். அம்பாளின் திருநாமம் ஸ்ரீகுலசேகரநாயகி.

முன் ஜன்ம சாபம் நீக்கிய தலம் என்பதால், தை அமாவாசை நாளில் பித்ருக்கள் கடன் செய்வதற்கு உகந்த தலம் இது. தை அமாவாசை நாளில் இங்கு வந்து, தாமிரபரணியில் நீராடி முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுப்பதால், பித்ரு தோஷங்களும் தீராத நோய்களும் நீங்கும் என்பது ஐதீகம்.

## அகரம்:

தாமிரபரணி மஹாத்மியத்தில், வியாசரால் போற்றப்படும் இந்தத் தலத்தில்... காசி தலத்தைப் போலவே, ஸ்வாமி கிழக்கு நோக்கியும், அம்பாள் தெற்கு நோக்கியும் அருள் பாலிக்கின்றனர். எனவே இதை, 'தட்சிண காசி' என்று ஞான நூல்கள் சிறப்பிக்கின்றன. இங்கே வடக்கில் இருந்து தெற்கு நோக்கிப் பாயும் தாமிரபரணியை, `தட்சிண கங்கை' என்று போற்றுகின்றனர். இது, பித்ரு சாப விமோசன தீர்த்தமாகத் திகழ்கிறது.

ஆடி மற்றும் தை மாத அமாவாசைகளிலும், புரட்டாசி மாதத்தில் வரும் மஹாளய அமாவாசை திருநாளிலும் இங்கே வந்து, தாமிரபரணியில் நீராடி, ஈரத்துணியுடன் ஸ்ரீகாசிவிஸ்வநாதருக்கு வில்வ மாலையும் ஸ்ரீவிசாலாட்சிக்கு செவ்வரளி மாலையும் சார்த்தி வழிபட வேண்டும். அத்துடன், பசுநெய் ஊற்றி 21 தீபங்கள் ஏற்றி வைத்தோ, தில ஹோமம் (எள்ளினால் செய்யப்படும் ஹோமம்) செய்தோ வழிபட, ஈசனின் அருளும் கிட்டும்; பித்ருக்களும் ஆசீர்வதிப்பர்!

## திருபுவனம்:

சிவ பக்தர் ஒருவர் தந்தையின் ஈமக் கடன்களைச் செய்து முடிப்பதற்காகக் காசிக்குச் செல்ல விரும்பினார். ஆனால் வழிச் செலவுக்குக்கூட அவரிடம் காசில்லை. ஆனாலும், காசிக்குச் செல்வதில் உறுதியாக இருந்தார் அவர்.

அன்றிரவு அவரின் கனவில் தோன்றிய ஈசன், ''காசிக்குச் செல்ல முடியவில்லையே என்று வருந்தாதே! இங்கேயுள்ள ஆலயத்துக்கு வந்து, அருகில் ஓடும் நதியில் உன் தந்தையின் அஸ்தியைக் கரைத்து, பித்ரு காரியத்தை நிறைவேற்று. காசிக்குச் சென்று காரியம் செய்தால் என்ன பலன் கிடைக்குமோ, அதே பலன் இங்கேயே கிடைக்கும்'' என அருளி மறைந்தார்.

கனவால் மெய்சிலிர்த்துக் கண் விழித்தவர், தென்னாடுடைய ஈசனின் பெருங்கருணையை எண்ணி மகிழ்ந்தார். விடிந்ததும், அருகில் உள்ள நதிக்கரைக்குச் சென்று, பித்ரு காரியங்களை நிறைவேற்றினார். இறுதியாக, அஸ்தியைக் கரைக்க நீரில் இறங்கினார். அப்போது, அஸ்தியானது (சாம்பல்) நறுமணம் கமழும் பூக்களாக மாறியது. இறைவனும் அருளை அள்ளி வழங்க, முன்னோரின் ஆசீர்வாதமும் அந்த மைந்தருக்குக் கிடைத்தது என்கிறது ஸ்தல புராணம்.

'காசிக்கு நிகரான பலன் தரும்' என்று இறைவனே குறிப்பிட்ட அந்தத் தலம் திருபுவனம்; நதி வைகை. அஸ்தி சாம்பலைப் பூவாக மாற்றியதால், இங்குள்ள இறைவனுக்கு "ஸ்ரீபூவனநாதர், ஸ்ரீபுஷ்பவனநாதர்" எனத் திருநாமங்கள் அமைந்ததாகச் சொல்வர். அம்பாளின் திருப்பெயர் "ஸ்ரீசௌந்தரநாயகி".

இந்தத் தலத்துக்கு இன்னொரு சிறப்பும் உண்டு. அதாவது, வடகிழக்காக அமைந்திருக்கும் ஆலயம் இது. எனவே, அமாவாசை என்றில்லாமல் எல்லா நாளுமே இங்கே பித்ரு காரியம் செய்வதற்கு ஏற்ற நாளாகக் கருதுகின்றனர் பக்தர்கள்!

## தீர்த்தாண்ட தானம்:

''முன்னோர் ஆராதனை என்பது மிகவும் முக்கியமான வழிபாடு. முன்னோர் ஆராதனை செய்யச் செய்ய, வாழ்க்கையில் அனைத்து நன்மைகளும் உண்டாகும்'' என்று ராமபிரானுக்கு அகத்தியர் அருளினார். அதன்படி, ஓர் அமாவாசை நாளில் பித்ருக்களுக்கான கடனைச் செய்து, சிவபெருமானின் பேரருளைப் பெற்றார் ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி. ராமநாதபுரம் மாவட்டம், தொண்டியில் இருந்து சுமார் 15 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது தீர்த்தாண்டதானம். இங்கே ஈசனின் திருநாமம் "ஸ்ரீசர்வதீர்த்தேஸ்வரர்".

ஆடி மற்றும் தை மாதங்களில் வரும் அமாவாசைப் புனித நாளில், இந்தத் தலத்தில் திதி கொடுப்பது கூடுதல் பலனைத் தரும் என்பர்.

# மதம் சமுதாயத்தின் முதுகெலும்பு



சித்தர்கள் மனித உடம்பை பற்றி பேசுகிறார்கள். அந்த உடம்பை செப்பனிட்டு இறைவனிடம் அழைத்து செல்லும் யோக கலைகளை பற்றி பேசுகிறார்கள். இவைகளெல்லாம் எதற்கு என்று கேட்டால், மனிதப் பிறவியின் இறுதி லட்சியமான முக்தியை அடைவது என்பதற்காகத்தான் என்கிறார்கள். முக்தியை நோக்கி மனிதன் ஏன் செல்ல வேண்டும்? முக்தி என்பது அவ்வளவு முக்கியம் வாய்ந்த ஒன்றா? எப்போதோ இறுதிப் பகுதியில் அடையக்கூடிய முக்திக்காக இப்போது இருக்கும் வாழ்க்கையை கரடுமுரடாக்கி கொள்ள வேண்டுமா? மிக குறுகிய மனித வாழ்க்கையில் கிடைக்கும் சிறிய சந்தோசங்களை அனுபவிக்காமல் விட்டுவிட்டு, கண்ணுக்கே தெரியாமல் இருக்கிறதா? இல்லையா என்று புரியாமல் மாயக்கண்ணாடிக்குள் மின்னுகிற முக்திக்கா அரும்பாடு படவேண்டுமா? என்று சிலருக்கு தோன்றும்.

சித்தர்கள் அர்த்தமற்ற வழியில் முக்தி முக்கியம் என்று கருதவில்லை. முக்தி என்ற மூன்றெழுத்தை சர்வ சாதாரணமாக இன்று நாம் பயன்படுத்துகிறோம் என்றாலும், அந்த வார்த்தையை அதன் பொருளை மனித சமுதாயம் பெற்றுக் கொள்வதற்கு மிக நீண்ட நெடிய காலம் போராடி இருக்கிறது. தலைமுறை தலைமுறையாக பெற்றுவந்த அனுபவத்தின் வரலாற்று தெளிவாகத்தான் சித்தர்கள் முக்தி கட்டாயம் வேண்டும் என்கிறார்கள். அந்த கருத்தை அனுபவப்பட்ட பெரியோர்களும் ஏற்றுக்கொள்கிறார்கள். எதற்காக முக்தி கட்டாயம் தேவை? முக்தியை அடைவதற்கு மனிதன் இதுவரை உழைத்தது என்ன? பெற்றது என்ன? எப்போது அந்த உழைப்பை ஆரம்பித்தான்? என்பதை எல்லாம் சற்று நிதானமாக சிந்திக்க வேண்டும்.

சமுதாய அமைப்புகள் என்ற வார்த்தையை இன்று பல இடங்களில் கேட்கிறோம், படிக்கிறோம், நாமும் கூட எழுதுகிறோம். இந்த சமுதாய அமைப்பில் எவை எவையெல்லாம் அடங்குகிறது என்று பலரும் சிந்தித்தது கிடையாது. கணவன் மனைவி என்று இரண்டு மனித ஜீவன்கள் இணைந்து உருவாக்குகிற குடும்பம் என்பதில் தொடங்கி, அரசாங்கம் என்பது வரை பல நிறுவனங்களை உள்ளடக்கியது தான் சமுதாய அமைப்பாகும். அத்தகைய சமுதாய அமைப்பில் முதுகெலும்பாக இருப்பது மதம் என்று சொல்லலாம். மதத்தை பற்றி இன்று பல்வேறு எதிர்மறையான கருத்துக்கள் உலா வருகின்ற போது, நான் அது சமூகத்தின் முதுகெலும்பு என்று சொல்வதனால் சிலருக்கு திகைப்பாக கூட இருக்கும்.

அரசு சட்டம் என்பதெல்லாம் உலகியல் சார்ந்த மனித தேவைகளை பூர்த்தி செய்வதற்கு உருவாக்கப்பட்டவைகளாகும். ஆனால், மதம் என்ற அமைப்பு மனிதனை உலகியல் கடந்த உன்னதமான அனுபவத்தை நோக்கி அழைத்து செல்ல உருவாக்கப்பட்டதாகும். நாம் கண்ணெதிரே காணும் இந்த உலகில் அனுபவிக்கும் புணர்ச்சி, இனவிருத்தி, உணவு, உடை, ஆடம்பரம், பதவி, சுகம் ஆகிய அனைத்துமே சிற்றின்பங்கள்.

ஆனால், உலகத்தை கடந்து, உலக பொருள்களை கடந்து கண்ணுக்கு தெரியாமல் மறைந்திருக்கும் இன்பத்தை நாடுவது பேரின்பமாகும். இதனுடைய மறுபெயர் தான் முக்தியாகும் எதை பெற்றால் எல்லாவற்றையும் பெற்றதாக ஆகுமோ அந்த பெரும் பேறுக்கு மனிதனால் வைக்கப்பட்ட பெயர் தான் முக்தி என்பது.

உலகத்தில் அனுபவிக்கும் சுகங்களையும், அதன் காரணங்களையும் ஆதார பூர்வமாக நிரூபிக்கலாம். ஆனால், உலகத்தை கடந்த முக்தியினால் பெறுகின்ற சுகத்தை, எந்த ஆதாரத்தின் அடிப்படையிலும் புற உலகத்திற்கு நிரூபிக்க இயலாது. அதனால் இதை,

**எதை பெற்றால் எல்லாவற்றையும் பெற்றதாக ஆகுமோ அந்த பெரும் பேறுக்கு மனிதனால் வைக்கப்பட்ட பெயர் தான் முக்தி**

கற்பனாவாதம் என்றும், அறிவுக்கு பொருந்தாத மூட சித்தாந்தம் என்றும் நாத்திக நண்பர்கள் புறக்கணிக்கிறார்கள். நிரூபிக்க முடியவில்லை என்றால், ஒன்றை முற்றிலுமாக இல்லை என்றோ, விரிவுரை செய்ய இயலாது என்றால் ஒரு தனிமனித அனுபவத்தை பொய் என்றோ புறக்கணித்து விட இயலாது. ஒருவேளை முக்தி என்பது இறைவனோடு சம்மந்தபட்ட காரியம் என்பதனால், அதை நிரூபித்து காட்ட இந்த உலகத்து பொருட்களுக்கு சக்தி இல்லாது இருக்கலாம். இந்த வகையில் சிந்தித்தால், ஆன்மீக ஞானிகளின் அருளுரைகளும், அனுபவ வாக்கியங்களும் பொய்யல்ல, கற்பனை கட்டுக்கதைகள் அல்ல, அனைத்தும் சத்திய வாக்குகளே என்பது புலனாகும்.

முக்தி என்பதை ஆன்ம சுகம் என்பதை நிரூபிக்க


ஆன்மிகமலர் மெயில் புக் 1-15 பிப்ரவரி 2019 31 www.aanmeegamalar.com




முடியவில்லை என்றாலும் கூட, அதை நோக்கியே பன்னெடுங்காலமாக பலதரப்பட்ட மக்கள் ஈர்க்கப்பட்டு கொண்டே இருக்கிறார்கள். அப்படி ஈர்க்கப்படும் மக்களுக்கு, வழிகாட்ட கூடியதாக, ஒரு கட்டமைப்பாக அழைத்து செல்ல கூடியதாக மதம் என்பது இருக்கிறது. அதனால் தான் மதத்தை சமுதாயத்தின் முதுகெலும்பு என்று துணிந்து கூறுகி றேன். மனிதன் டார் வின் தத்துவப்படி குரங் கிலிருந்து வந்தானா? அல்லது நேற்றுவரை இல்லாமல் இருந்து இன்று திடீரென்று புதியதாக படைக்கப்பட்டானா? என்று ஆராய்ச்சி செய்யாமல், மனிதன் என்று மனிதனாக சிந்திக்க துவங்கினானோ அன்றிலிருந்தே மதம் வந்துவிட்டது. புலன்கடந்த தேடுதலான ஆன்மிகம் வந்துவிட்டது என்பது தான் பொருளாகும்.



மனித வரலாற்றில் மத உணர்ச்சியற்று வாழ்ந்தார்கள் என்பதற்கான சான்றுகள் எதுவுமே இல்லை. இன்றைய நாகரீக மனிதன் கற்காலம் என்று கருதக்கூடிய நாகரீகம் இல்லாத காலத்தில் கூட மதமும், மத சிந்தனையும் இருந்தது. இதன் அடிப்படையில் கூர்மையாக நமது பார்வையை செலுத்தினால், இன்று நடைமுறையில் இருக்கும் மதங்கள் எதுவும் புதியதாக தோன்றிவிடவில்லை. ஆதி மனித சிந்தனையின் புனரமைப்பு தான், சீர்திருத்தங்கள் தான் இன்றைய மதம் என்று அறிய வேண்டும். எனவே ஆன்மீக சிந்தனை என்பது ஆதிகாலம் தொட்டே மனிதனின் வாழ்க்கையோடு இணைந்திருக்கிறது. ஆன்மிகம் இல்லாத, அறச்சிந்தனைகள் கிடையாது. அறம் இல்லாத மனித வாழ்க்கை என்பது மிருக வாழ்க்கைக்கு சமமானது. அதனாலும் தான் மதத்தை சமுதாயத்தின் முதுகெலும்பு என்று சொன்னேன். அதை மீண்டும் சொல்வேன்.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 9442426434

ஆன்மிகம் தத்துவம் உடல்நலம் பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

www.aanmeegamalar.com





# சைதன்யத்தால் காரியங்கள் எவ்வாறு நடக்கின்றன?

சைதன்யம் என்பது சாஸ்வதமான ஈச்வர சக்தி; அத்தகைய ஈச்வர சக்தியால்தான் நாம் உயிரோடிருக்கிறோம். இந்த ஈச்வர சக்தி நம் உடலை விட்டு போய்விட்டால் நாம் வெறும் சவம் தான். இறந்த பின் நம்மால் எந்த காரியத்தையும் செய்ய முடியாது; அதனால் ‘நான் உயிருடன் இருக்கிறேன்’ என்பதே எனக்கு கிடைத்த பெரும் பாக்கியம் ஆகும். ‘நம்மால் நடக்கும் எந்த காரியமும் இந்த சைதன்ய சக்தியின் பலத்தாலேயே நடக்கிறது’ என்ற உணர்வை எப்பொழுதும் மனதில் பதிய வைத்துக் கொண்டால் நம் மிடமுள்ள இந்த ஈச்வர சக்தியாகிய சைதன்யம் பெருகுகிறது, காரியங் களில் ஏற்படும் தடங்கல்கள் தானாகவே விலகு கின்றன. சைதன்ய சக்தியால் மட்டுமே காரியங்கள் நடப்பதால் ‘நான் இந்த காரியத்தை செய்தேன்’ எனக் கூறும்போது நம்மிடமுள்ள சைதன்ய சக்தி குறைகிறது. அதனால் ‘சைதன்ய சக்தியால் எல்லாக் காரியங்களும் நடக்கின்றன’ என்ற உணர்வை எப்பொழுதும் வைத்திருப்பது அவசியம் ஆகும்.


பரசுராம் பாண்டே

ந ம் மி ட மு ள் ள சைதன்ய சக்தியை விழிப்படைய செய்வதற்கு ஒவ்வொரு காரியத்தையும் ஈச்வரன் எப்படி எதிர் பார்க்கிறானோ அப்படி ஆளுமை குறைகள் மற்றும் அஹம்பாவம் இல்லாமல் இறை குணங்களுடன் செய்ய வேண்டும். உதாரணத்திற்கு நீங்கள் விளம்பரம் செய்யும்போது யாராவது ஒருவரின் பெயரை உபயோகித்து விளம்பரம் செய்கின்றீர்கள். அதற்கு பதிலாக சைதன்யத்திற்கு முக்கியத்துவம் அளித்து வாக்கியத்தை அமைப்பது அவசியம். எப்படி ‘சைதன்ய சக்தியால் ‘விலாஸ்’ என்ற ஜீவன் மூலமாக இந்த குறிப்பிட மகத்துவம் நிறைந்த காரியம் நிறைவேறிற்று’ என்ற இந்த வாக்கியத்தில் சைதன்யத்திற்கு முதலிடம் கொடுக்கப்பட்டு விலாஸ் என்ற பெயருக்கு அடுத்த கீழ் ஸ்தானமே கொடுக்கப்பட்டுள்ளது.



அதனால் ‘விலாஸ்’ என்ற ஸகுண ரூப பெயருடன் அஹங்காரம் ஒட்டிக் கொள்ளாமல் அஹங்காரம் அழிந்து சைதன்யம் நிறைகிறது. இதன் நேர்மறை பரிணாமம் ஜீவன் மீது ஏற்பட்டு ஜீவனின் முன்னேற்றம் நடக்கிறது. இது போன்று சைதன்யத்திற்கு முதலிடம் தந்து ஒவ்வொரு காரியத்தையும் செய்யும்போது அது வெற்றியடைகிறது.

அதுமட்டுமல்ல, நம்மிடமுள்ள ஆளு மை குறைகளும் அகம்பாவமும் கூட நஷ்டமடைகிறது. அதன் மூலம் ஆன்மீக முன்னேற்றம் ஏற்பட்டு அதன் பரிணாமம் சமூகம் மற்றும் தேசத்தின் மீது ஏற் படுகிறது. இவ் வாறு ஒரு தேசம் பல பொருந்தியதாக ஆகிறது.’

– பராத்பர குரு) பரசுராம் பாண்டே (மகாராஜ்)

மேலும் விவரங்களுக்கு
hindujagrut
தொ.எண்: 938094962

www.aanmeegamalar.com

# சபரிமலை

## உண்மை வரலாறும், உட்புகுத்தப்பட்ட கருத்துக்களும்



திரு. அரவிந்த் சுப்ரமணியம்
(Aravind Subramanyam)
அவர்கள் எழுதிய அய்யப்பன் வரலாறு சென்ற இதழ் தொடர்ச்சி.....

சபரிமலையின் புகழ் நாளுக்கு நாள் அதிகமானது அங்கிருந்த சில ஆசாமிகளுக்குப் பொறுக்கவில்லை. கோவிலின் பாரம்பரியத்தை அழிக்கும் முயற்சி அப்போதே நடந்தது. 1950ல் சதியின் காரணமாக சபரிமலையில் பெரு நெருப்பு உண்டாக்கப்பட்டு திருக்கோவில் சாம்பலானது. ஐயப்பனின் விக்ரஹமும் மூன்றாக உடைந்து சேதமடைந்தது. ஆனால் ஐயனின் திருவுள்ளம் வேறுவகையில் இருந்தது. எந்தக் காரணத்துக்காக இந்தச் சதிச்செயல் அரங்கேறியதோ அதற்கு நேர் எதிராக, மிகச்சிலர் மட்டுமே அறிந்திருந்த சபரி மலைக் கோவில் பார் முழுவதும் அறிய இந்த நெருப்பு காரணமாகி விட்டது. இதன் பின் னர் சில மாதங்கள் பின்னப்பட்ட விக்ரஹமே பூஜையை ஏற்றது.

இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட வேண்டிய மற்றொரு விஷயம் தீவிபத்து குறித்து கேள்விப்பட்டு வந்த போலீஸும், தீயணைப்புத்துறை வீரர்களும் பம்பையில் பரிதவித்து நின்றார்கள். விரதமில்லாத நாம் எப்படி சபரிமலை ஏறுவது, அதனால் ஏதும் தெய்வதோஷம் உண்டாகுமோ என்ற பயம் அவர்களை ஏறவிடாமல் தடுத்தது. அப்போது என்னுடைய பாட்டனார் உட்பட அங்கிருந்த குருமார்கள் அவர்களுக்கு விபூதி கொடுத்துக் கடமையைச் செய்யுங்கள் என்று ஆசி கூறி மலையேறச் சொன்னதாக அவர்கள் சொல்லிக் கேட்டுள்ளேன்.

### இன்றைய ஐயப்ப பிரதிஷ்டை

இதன் பின்னர் சபரிமலையில் பிரதிஷ்டை செய்யப்பட வேண்டிய புதிய விக்ரஹம் உருவாக்கப்பட்டது. கேரளத்தைச் சேர்ந்த சுவாமி விமோசனானந்தா என்பவர் ஒரு விக்ரஹத்தையும், தமிழகத்தின் பிடி.ராஜனும் நவாப் ராஜமாணிக்கம் பிள்ளை இருவரும் சேர்ந்து ஒரு விக்ரஹத்தையும், என்னுடைய பாட்டனார் CVஸ்ரீநிவாஸ ஐயர் ஒரு விக்ரஹத்தையும் தயார் செய்தார்கள். 1952ல் இன்று நாம் காணும் ஐயப்பனின் விக்ரஹம், பிடி.ராஜன், ராஜமாணிக்கம் பிள்ளை கொணர்ந்த விக்ரஹம் தேவ ப்ரச்னத்தின் மூலம் ஏற்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டது. இந்தப் பிரதிஷ்டையை நடத்தியது கண்டரரு சங்கரரு. (பின்னர் ஐயப்பனைக் குறித்து மக்களுக்குத் தெரியப்படுத்த, பிடிராஜன் தலைமையில் தென்னகம் எங்கும் எடுத்துச் செல்லப்பட்ட மற்றொரு விக்ரஹமும் உண்டு. அது ஹரித்வாரில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. ஸ்வாமி விமோசனானந்தா உருவாக்கிய விக்ரஹம் காசியில் 18 படிகளுடன் பிரதிஷ்டை செய்யப்பட்டது. எனது பாட்டனார் உருவாக்கிய விக்ரஹம், இன்றும் பாலக்காட்டில் எங்கள் பூர்வீக வீட்டில் உள்ளது.)

பின்னம் அடைந்த பழைய ஐயப்ப விக்ரஹம் மணியாக்கப்பட்டு சந்நிதிக்கு எதிரே கட்டிவைக்கப்பட்டது. மணி ரூபத்தில் காட்சி தரும் மணிகண்ட ஸ்வாமி, ஒலி ரூபமாகவும் அதாவது சப்தமாகவும் இருந்து அருள்பாலிக்கிறார். இதன் பிறகுதான் சபரிமலையின் ஒலி, உலகெங்கும் இன்னும் பிரவாகமெடுத்துப் பரவியது.

### சின்னப்பாதை

இந்த சம்பவங்களுக்குப் பிறகு கொஞ்சக்



கொஞ்சமாக சபரிமலைக்கு பக்தர் கூட்டம் வரத் துவங்கியது. 1960–களில் திரு விவி.கிரி கேரள மாநில கவர்னராகப் பணியாற்றினார். கவர்னருக்கு சபரிமலை செல்லும் ஆசை உண்டானது. ஆனால் பெரிய பாதையில் செல்ல அவரால் முடியாது. கவர்னர் விவி.கிரிக்காக சாலக்காயம் பாதை உருவானது. அதிலிருந்துதான் சின்னப்பாதை என்று சொல்லப்படும் பம்பை பாதை பிரபலமானது.

இன்று நாம் காணும் பம்பா கணபதி ஆலயம், ராமர் சன்னிதி போன்றவையெல்லாம் இதன் பின்னர் உருவானதே. பழமலைக்காரர்களைப் பொருத்த வரை பகவான் குழந்தையாக வந்திறங்கிய பம்பை என் பது பெரியானவட்டம் பகுதியில் ஓடும் பம்பைக் கரையே.

ஆக, அரசியல் தலையீடே பெரியபாதையை சுருக்கி சின்ன பாதையை உருவாக்கிய காரணம். அதே போல டோலி முறை உ ரு வா க வு ம் விவி.கிரியே காரணம். சின்னப்பாதையிலும் நடந்து ஏற முடியாத விவி.கிரி தன்னை நாற்காலியில் அமர்த்திச் சுமந்து செல்லும்படிக் கேட்டுக் கொண்டார். சபரிமலை விதிகளை மீறி அப்படி சுமந்து செல்ல எல்லோருமே பயப்பட்டார்கள். தன்னைச் சுமந்து செல்ல முன்வருபவர்கள் நால்வருக்கும், குடும்பத்துக்கு ஒரு ஆளுக்கு அரசு வேலை தருவதாக விவி.கிரி சொன்னார் என்று பெரியோர்கள் சொல்வார்கள். அப்படி டோலி முறையும் சபரிமலைக்குள் வந்தது.



### பெண்களுக்கான நிலை

சில விஷயங்கள் சட்டம் போட்டுத்தான் சொல்லப்பட வேண்டும் என்றில்லை. பாரம்பரிய நம்பிக்கை என்பது நம் பாரத மக்கள் உணர்விலேயே கலந்தது. ஆலயத்துக்குள் செருப்புப் போட்டுக்கொண்டு வரக்கூடாது என்பது போர்டு எழுதி தெரிவிக்க வேண்டிய நிலை இந்தியாவில் இல்லை. ஆனால் அதை அறியாதவர்களுக்கே விதிகளை எடுத்துச் சொல்லவேண்டும்.

1820ல் வெளியான ஒரு கேரள அரசு சர்வே குறிப்பு சபரிமலை பற்றிப் பேசுகிறது. Word and Connor என்ற ஆங்கிலேய அதிகாரிகள் வெளியிட்ட அரசு வெளியீடு, பூப்படைந்த பெண்களும் மாதவிடாய் நிற்காத பெண்களும் சபரிமலை ஏறத் தடை இருப்பதைத் தெளிவாக உரைக்கிறது. ஆங்கிலேயர்களும் கூட அதற்கு மதிப்பளித்து அந்த ஆலய சம்பிரதாயத்தை மாற்ற முயற்சிக்கவில்லை.

ஆனாலும் 1950கள் வரை ஒன்று இரண்டு பெண்கள் சபரிமலைக்கு வந்தது கூடக் கேள்விப்பட்டது இல்லை. அது யோகபீடம் என்ற காரணத்தால், மாதவிடாய் சுழற்சி இருக்கும் பெண்களின் உடற்கூறுக்கு அந்த க்ஷேத்ரத்தின் யோக

www.aanmeegamalar.com

**பெரிய பாதையில் நடந்துசெல்ல முடியாத அன்றைய கவர்னர் வி.வி.கிரிக்காக 1960-களில் சின்னபாதை உருவாக்கப்பட்டது. சின்னப்பாதையில் நடந்து ஏற முடியாத தன்னை நாற்காலியில் அமர்த்திச் சுமந்து செல்லும்படிக் கேட்டுக் கொண்டார். சபரிமலை விதிகளை மீறி அப்படி சுமந்து செல்ல எல்லோருமே பயப்பட்டார்கள். தன்னைச் சுமந்து செல்ல முன்வருபவர்கள் நால்வருக்கும், குடும்பத்துக்கு ஒரு ஆளுக்கு அரசு வேலை தருவதாக விவி.கிரி சொன்னார் அப்படி உருவானதுதான் டோலி முறை.**

நிலை ஏற்றது இல்லை, அதனால் பாதிப்பு உண்டாகும் என்பதை பக்தர்கள் நம்பி, அதற்கு மதிப்பளித்தே இருந்தார்கள். திருவிதாங்கூர் அரசுக்கே அப்போது சபரிமலைக் கோவில் சொந்தமாக இருந்தது. ஆனால் திருவிதாங்கூர் மஹாராணி, ராணி பார்வதி பாய், கோவில் விதிகளை அனுசரித்து, 1942ல், தனது கருப்பை நீக்கப்பட்ட பின்பே சபரிமலை வந்து ஐயப்பனை தரிசித்தார்.

பம்பை கணபதி கோவில் உருவாக்கப்பட்டு, சின்னப்பாதையும் வந்த பிற்பாடே அதாவது 1960களுக்குப் பிறகே பெண்கள் சபரிமலைக்கு வரத்தலைப்பட்டார்கள். அப்போதும் இளம் வயதுப் பெண்கள் மலைக்கு வரவில்லை. யாரும் அழைத்து வரவும் இல்லை. தனது 50வது வயதுக்குப் பிறகு சபரிமலை யாத்திரை துவங்கி 40 மலை யாத்திரை முடித்த ஆண்டிப்பட்டியைச் சேர்ந்த ஒரு பாட்டியம்மா மிகவும் பிரபலம். பஜனைப்பாடகியான பெங்களூர் ரமணியம்மாளும் தனது 55 வயதுக்குப் பின்னர் சபரிமலை யாத்திரை மேற்கொண்டு பெரும் குழுக்களையும் அழைத்துச் சென்றார். சபரிமலையுடனும் ஐயப்பனுடனும் தொடர்புடைய குடும்பங்களான தாழமன் இல்லம், கம்பங்குடியார், பந்தளம் ராஜ குடும்பம், ஆலங்காடு, அம்பலப்புழை சங்கம் என இவர்கள் குடும்பங்களில் யாரும் விதியை மீறித் தங்கள் குடும்பப்பெண்களைக் கூட மலைக்கு அழைத்து வருவதில்லை என்பதையும் அறிந்துகொள்ள வேண்டும்.

1900களில் வருடம் ஒருமுறை திறந்த சபரிமலை நடை, பின்னர் மண்டல பூஜைக்குத் திறக்கப்பட்டு, இரு மாதங்களுக்கு ஒருமுறை திறக்கப்பட்டு, 1960க்குள் மாதா மாதம் திறக்கும் நிலை ஏற்பட்டது.

இந்தநிலையில்தான் பம்பாவழிப்பாதைஉருவான காரணத்தால், வசதிகள் அதிகமாயின. பெண்கள் அதிகம் வரத்துவங்கினார்கள். 197580களுக்குப் பின் ஆந்திர கர்நாடக மாநில பக்தர்கள் அதிகம் வருவதும், அவர்கள் குடும்பத்துடன் வந்து, பம்பையில் பெண்களை விட்டுவிட்டு, தாங்கள் மட்டும் மேலே சென்று தரிசனம் கண்டு வரும் வழக்கத்தை உருவாக்கினார்கள். மாத பூஜைகளில் பலநாட்களில் ஆளே இல்லாத நிலை இருப்பதைக் கண்டு இந்தப்பெண்களில் சிலர் தன்னிச்சையாக மேலே வரத் துவங்கினார்கள்.

அதிகாரிகள் சிலரும் இதனைக் கண்டும் காணாமலும் இருந்து வந்தார்கள். இந்த இடத்தில் இன்னொரு விஷயத்தையும் சொல்லவேண்டும். 2017ல் புதிய கொடிமரம் பிரதிஷ்டை செய்யப்பட வேண்டி, பழைய கொடிமரம் பிரிக்கப்பட்டபோது ஒரு குட்டு வெளிப்பட்டது. 1965–66களில் சபரிமலைக்குக் கொடிமரம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. அந்தக் காலத்திலேயே வெறும் காங்க்ரீட் சிமெண்ட்டைக் கொண்டு கொடிமரம் போலக் கட்டி அதற்கு மேலே பித்தளைத் தகடுகளால் மூடும் அளவுக்கு அரசு அதிகாரிகள் ஜித்தர்களாக இருந்திருக்கிறார்கள் என்றால் விதிகளை மீறி அங்கொன்றும் இங்கொன்றுமாக பெண்களை அனுமதித்ததில் ஆச்சர்யம் ஒன்றும் இல்லை.

இந்நிலையில், இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல எம்.என்.நம்பியார் நடித்த ‘நம்பினார் கெடுவதில்லை’ திரைப்படத்தை சபரிமலையிலேயே படமாக்க எண்ணினார்கள். 1986ல் சுதாசந்திரன், ஜெயஸ்ரீ போன்ற இளம் நடிகைகளுடன் படக்குழுவினர் அங்கே வந்து நடிக்க, படம் எடுக்கப்பட்டது. இதன் பின்னரே பிரச்சினை விஸ்வரூபம் எடுத்தது.

கேரள நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, 1991ல் (பூப்பெய்திய பெண்கள், மாதவிடாய் நிற்காத பெண்கள் என்றெல்லாம் விதியில் எழுத முடியாத காரணத்தால், நாகரீகமாக) 10 வயதுக்கும் குறைவாகவும், 50 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் மட்டுமே சபரிமலையில் அனுமதிக்கப்படுவார்கள் என்ற விதி அமலானது.

1972ல் பரணீதரன் ஆனந்த விகடனில் கேரள விஜயம் என்ற பெயரில் ஒரு தொடர் எழுதினார். அதில் ஒரு சம்பவத்தைச் சுட்டிக் காட்டுகிறார்: சபரிமலையில் ஒரு பெரியவர் தேவஸ்தான அதிகாரிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுகிறார். அங்கிருந்த தகவல் பலகையைச் சுட்டிக் காட்டி, “இங்கே குழந்தைகளுக்கு அன்னப்ராஸனம் நடத்த கட்டணம் என்று போட்டிருக்கிறீர்களே, அம்மா இல்லாமல் கைக்குழந்தை எப்படி வரும்? நீங்களே இங்கே இளம் பெண்கள் வருவதை ஊக்குவிக்கிறீர்களா?” என்று சண்டை போட்ட சம்பவம் ஒன்றைக் குறிப்பிடுகிறார்.

1994ல் இதே போல வத்ஸலா குமாரி என்ற ஐ.ஏ.எஸ் அதிகாரி தனது 42வது வயதில், பணி நிமித்தமாக சபரிமலை செல்ல அனுமதி வேண்டி நீதிமன்றத்தை அணுகினார். பணிநிமித்தமாக மேலே செல்ல அனுமதி அளித்த நீதிமன்றம், ஆலய சம்ப்ரதாயத்தில் தலையிடக்கூடாது என்ற காரணத்தால் பதினெட்டாம்படி ஏறவோ, சன்னிதானம் செல்லவோ அனுமதி அளிக்க வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. வத்ஸலா குமாரியும் 50 வயது வரை காத்திருந்தே ஐயப்ப னை தரிசனம் செய்தார்.

அப்போதுமே பக்தர்கள் இது ஆலய ஸம்ப்ரதாயத்துக்கு எதிரானது என்று உணர்ந்து அதை கடைப்பிடிக்கவே செய்தார்கள், அதை மீற நினைத்தவர்களை எதிர்த்தும் இருக்கிறார்கள்.

## இன்றைய நிலை

இன்று சபரிமலை மாறிவிட்டது; பழைய ஆசாரங்கள் பலதும் பலரும் கடைப்பிடிப்பது இல்லை. மண்டல விரதம் இன்ஸ்டண்ட் விரதம் ஆகிவிட்டது. பெண்கள் மட்டும் வந்தால் தவறா என்ற கேள்வி முன்வைக்கப்படுகிறது.

இன்றைக்கும் மண்டல விரதத்தை திரிகரண சுத்தியோடு கடைப்பிடிப்பவர்கள் இருக்கவே செய்கிறார்கள். 40 வருடம் ஆனாலும் ஒரே குருநாதருடன் அவர் கட்டளையை ஏற்றே மலைக்குச் செல்பவர்களும் இருக்கிறார்கள். சிலர் தவறு செய்கிறார்கள் என்பதால் தவறு நியாயம் ஆகாது என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.

ஐயப்பனைப் பக்தி பூர்வமாக நம்புபவர்கள் ஐயப்பன் வாக்கை மீற மாட்டார்கள். மீறி வர நினைப்பவர்கள் ஐயப்பனை முழுமையாக நம்பவில்லை என்றே பொருள்.

சபரிமலை ஆலயம் தனித்தன்மை கொண்டது. பகவான் சாஸ்தா மனிதனாக பூமியில் தோன்றி, நமக்காக தவக்கோலம் பூண்டு நைஷ்டீக பிரம்மச்சரியத்தில் தனியோகம் புரியும் மஹா யோக பீடம். இன்னும் அங்கே மணிகண்டன் ஜீவனோடுதான் இருக்கிறான். அதனாலேயே எந்த ஒரு கோவிலுக்கும் இப்படி ஒரு விரத நியமம் இல்லை; எந்த ஒரு கோவிலுக்கும் இப்படி ஒரு பதினெட்டுப் படியும் அதற்கான பூஜையும் இல்லை; எந்த ஒரு கோவிலுக்கும் இப்படி ஒரு ஆத்ம சமர்ப்பண தத்துவமான இருமுடியும் நெய் அபிஷேகமும் இல்லை.

இப்படிப்பட்ட ஒரு சம்பிரதாயத்தைதின் ஒரு பகுதியைத்தான் இன்று நீதிமன்ற ஆணை மூலம் தகர்த்துவிட்டதாக எண்ணுகிறார்கள். ஆனால் இது ஒரு சோதனைக் காலம் என்றே பக்தர்கள் கருதுகிறார்கள். தீ விபத்தைக் காரணமாக்கி ஐயப்ப தர்மத்தை உலகறியச் செய்த பகவானின் லீலை போல, இந்தச் சோதனையை சாதனையாக்கி இன்னும் லீலைகள் நடத்துவான் ஹரிஹரசுதன்.

க்ஷத்ரிய தர்மத்தைக் கைவிடாமல், நீதிமன்றத் தலையீட்டை ஏற்காமல், சம்பிரதாயத்தைக் கடைப்பிடிக்க குரல் கொடுக்க பந்தள ராஜா கூட்டிய கூட்டத்துக்கு 1 லட்சம் பக்தர்கள் – பெண் பக்தைகள் கூட இருக்கிறார்கள். உண்மை பக்தர்கள் இருக்கும் வரை ஆலயத்தின் சம்பிரதாயங்கள் காக்கப்படும்.

## ஸ்வாமியே சரணம் ஐயப்பா

குறிப்பு: கட்டுரையாசிரியர் கடந்த 22 வருடங்களாக ஐயப்பனைக் குறித்த ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளார். சபரிமலையில் பங்குனி உத்திரத் திருநாளை துவங்கி நடத்திய கல்பாத்தி ஸ்ரீநிவாஸ ஐயரின் பேரன் என்ற முறையில், இவரது குடும்பத்துக்கும் சபரிமலைக்குமான தொடர்பு நூறாண்டுகளுக்கும் மேலானது. இவர் ஐயப்பனைக் குறித்து மஹா சாஸ்தா விஜயம் என்ற 1000 பக்க நூலை இயற்றியுள்ளார்.

– நன்றி அரவிந்த் சுப்ரமணியம்

# ஸ்ரார்த்த காலத்தில் படைக்கவேண்டிய 1008 காய்கறிகள்

விசுவாமித்திரர் என்ற பெயரைக் கேட்டாலே தேவ அசுரர்கள் மிகவும் அஞ்சுவார்கள், காரணம் மிகுந்த கோபக்காரர், தனது கடுமையான தவத்தால் பிரம்ம ரிஷியாக உயர்ந்தவர்.

அதுவும் சாதாரண பிரம்மரிஷி அல்ல ஆனானப்பட்ட வசிஷ்ட மாமுனிகள் வாயால் பிரம்மரிஷி பட்டத்தை பெற்றவர். இந்தப் பட்டம் பெறுவதற்கு முன்னர் வசிஷ்ட மாமுனிக்கும் விசுவாமித்திரருக்கும் அடிக்கடி மோதல்கள் வெடிக்கும்.

வசிஷ்டரிடமிருந்து காமதேனுவை பறிக்க முயன்ற காலம் முதல் நடந்த பல மோதல்கள் அரங்கேறியுள்ளது. தனது முன்னோரின் நீத்தார் நினைவு நிகழ்ச்சிக்கு சாப்பிட வருமாறு விசுவாமித்திரரை அழைத்தார் வசிஷ்டர். “

அழைப்பை ஏற்பதில் சிரமம் இல்லை. ஆனால் ஒரு நிபந்தனை. எனது உணவில் 1008 வகை காய்கறிகள் படைக்கப்பட வேண்டும்”என நிபந்தனை ஒன்றை விதித்தார் விசுவாமித்திரர்.

இந்த பதிலால் குழப்பமும் கவலையும் அடைந்தார் வசிஸ்டர். முதலில் 1008 வகையான காய்கறிகள் உண்டா? அப்படியே இருந்தாலும் இத்தனை கறிகாய்களை சமைத்து யாராவது உணவு படைக்க முடியுமா? அப்படியே சமைத்துப்போட்டாலும் அதைச் சாப்பிட யாரால் முடியும்? ஒருவேளை நம்மை விசுவாமித்திரர் அவமதிக்க முயற்சிக்கிறாரா? இப்படி பலப் பல கேள்விகள் வசிஷ்டர் மனதில் தோன்றியது.

ஆனாலும் எதையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் “சரி 1008 காய்கறிதானே எனது மனைவியான அருந்ததியிடம் சொல்லி உணவுக்கு ஏற்பாடு செய்கிறேன்.” என்றார் வசிஷ்டர்.

குறிப்பிட்ட நாள் வந்தது வசிஸ்டரின் ஆஸ்ரத்திற்கு வந்தார் விசுவாமித்திரர். சிறிது ஓய்விற்கு பின் விசுவாமித்திரரரை சாப்பிட அழைத்தார் வசிஸ்டர்.

சாப்பிட வந்த விஸ்வாமித்திரர் இலையில் அமர்ந்தார். பாகற்காய்கறி, பலாப்பழம், பிரண்டைத் துவையல் இவைகளோடு, மேலும் எட்டு வகையான காய்கறிகள் மட்டுமே இலையில் இருந்தன. 1008 காய்கறிகள் இல்லை.

கடும் சினமுற்ற விஸ்வாமித்திரர், “இதென்ன ஏமாற்று வேலை? 1008 வகை காய்கள் எங்கே?” என்று வசிஷ்டரிடம் ஆவேசப்பட்டார்.

வசிஷ்டரோ “நான் அருந்ததியிடம் 1008 காய்கறிகளுடன் தானே சமைக்க சொன்னேன். அவளையே இதைப் பற்றி கேளுங்கள்” என்றார்.

வசிஷ்டர் விசுவாமித்திரர் இருவரது உரையாடலையும் கேட்ட கற்புக்கரசி அருந்ததி, தானே முன்வந்து... ஒரு ஸ்லோகத்தை கூறினால்.

“காரவல்லி ஸதம் சைவ
வஜ்ரவல்லி ஸதத்ரயம்
பனஸம் ஷட் ஸதம்சைவ
ஸ்ரார்த்தகாலே விதீயதே”

“இதுதானே ஸ்ராத்தகால விதி, உங்களுக்கு தெரிந்திருக்குமே!” என்றாள்.

விஸ்வாமித்திரர் வாயடைத்துப்போனார். பேசாமல் சாப்பிட்டுவிட்டு வாழ்த்தி விட்டுப் போனார். அருந்ததி கூறிய அந்த ஸ்லோகம் என்ன? மேற்கண்ட ஸ்லோகத்தின் பொருள்.

ஸ்ராத்தத் திதியன்று சமைக்கப்படும் சமையலில் சேர்க்கப்படும் காய்கறிகளில்,

பாகற்காய்கறி 100 காய்களுக்குச் சமம்,

பிரண்டைத் துவையல் 300 காய்களுக்குச் சமம்,

பலாப்பழம் 600 காய்களுக்குச் சமம்

என்று பாடல் கூறுகிறது.

ஆயிரம் காய்கள் ஆயிற்றா? மீதி இலையில் எண்ணிப்பாருங்கள், எட்டுகாய் கறிகள் வைத்திருக்கிறேன். ஆக மொத்தம் 1008 !” என்றாள். சாஸ்த்திரப்படி விளக்கம் சொன்ன அருந்ததியின் ஸமயோசித புத்தியை பாராட்டினார் விஸ்வாமித்திரர், நீத்தார் நினைவு நாள் ஆசியுடன், விசுவாமித்திரரின் ஆசியும் பெற்ற அருந்ததியை வாழ்த்திவிட்டு சென்றார். இதன்பின் நீத்தார் நினைவு நாளின்போது இந்த 1008 காய்கறிகள் படைக்கும் வழக்கத்தை இன்றும் ஒருசிலர் கடைபிடித்து வருகின்றனர்.









Owned, Published by C.NAGARAJAN. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.Nagarajan,
E-mail: aanmeegamalar@gmail.com Website: http://www.aanmeegamalar.com Cell: 08825844033

# இதய நோயை குணப்படுத்தும்

# "வேல் மாறல்"



இதய நோய், இரத்த அடைப்பு உள்ளவர்கள், வள்ளிமலை ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகள் தொகுத்தருளிய 'வேல் மாறல்' சுலோகத்தை நம்பிக்கையுடன், தொடர்ந்து படித்தால், இருதய பாதிப்பு எளிதாக நீங்கிவிடும்.

பாடல்:

திருத்தணியில் உதித்(து)தருளும்
ஒருத்தன் மலை
விருத்தன் என(து) உளத்தில்உறை
கருத்தன் மயில் நடத்து குஹன் வேலே.

––

திரைக்கடலை உடைத்துநிறை புனற்கடிது
குடித்(து)உடையும் உடைப்(பு) அடைய
அடைத்(து)உதிரம் நிறைத்துவிளை யாடும்

– 14 வது வரிகள்

இந்த வரிகளுக்கு இதய அடைப்பை நீக்கும் சக்தி அபரிமிதமாக உள்ளது. இந்த வரிகளைப் படித்து நிவாரணம் அடைந்தவர்கள் பலர்.

வரலாறு:

இந்த வேல் மாறல் உருவான வரலாறு மிகவும் சுவாரஸ்யமானது. 1928ல் ஒரு மந்திரவாதி சிலபல மாய வித்தைகளை கற்று, அதைப் பயன்படுத்தி தன்னை கலியுக முருகன் என்று பொய் பொருட்டு செய்து வந்தான், அப்போது வள்ளிமலை ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகள் முன் நிலையில் தனது மாய ஜாலத்தை பயன்படுத்தி தன்னை முருகன் என்று ஆணவத்துடன் தம்பட்டம் அடித்துக் கொண்டிருந்தபோது, வள்ளிமலை ஸ்ரீ சச்சிதானந்த சுவாமி, முருகன் அருளால் அருணகிரிநாதர் அருளிய வேல்வகுப்பில் உள்ள 16 வரிகளை முன்னும் பின்னுமாக வருமாறு 4 சுற்றுகளாக 64 வரிகளில் முருகனைத் துதித்து பாடினார்.



இவ்வாறு இவர் பாடிய மந்திரத்தை முருகனின் வேல்மாறல் மகா மந்திரம் என்று போற்றப்படுகிறது. இந்த மந்திரத்தை சொல்லும்போது, தீய சக்தி கொண்ட அந்த மந்திரவாதியின் உடல் நெருப்பால் எரிவதைப்போன்று அவதிப்பட்டு, கடைசியில் ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளிடம் மன்னிப்புகேட்டு தனது மாய வித்தைகளை கைவிட்டதாக கூறப்படுகிறது.

இவ்வாறு மனித உடலில் உள்ள தீய சக்திகளையும், நோய் களையும் எளிதாக தீர்க்கும் வல்லமை இந்த வேல்மாறலுக்கு உண்டு. கந்த சஷ்டி கவசம் போன்று இந்த வேல்மாறலுக்கும் சக்தி உள்ளது.

www.aanmeegamalar.com